# சாளரம்

விலை 15/-

ஜூலை 1995



நகரில் தரமான சைக்கிள் உதிரிப்பாகங்கள்
நியாயமான விலையில் கொள்வனவு செய்ய
வேண்டுமா?

## கணபதி களஞ்சியத்தை
நாடுங்கள்

சைக்கிள் உதிரிப்பாகங்கள் மற்றும்,
பல் பொருள் விற்பனையாளர்கள்

## கணபதி களஞ்சியம்

18, சந்தோசம் வீதி, யாழ்ப்பாணம்.

சின்ன விழிகளில் மின்னுகின்ற
சிந்தனைகள்தான் என்ன?



இந்தப் படத்திற்கு
உங்கள்கவிதையை
எழுதி அனுப்புங்கள்

ஒடுக்கப்படும் எமது சுபீட்சத்திற்காகப் போராடி வரும் எமது தேசிய விடுதலை இயக்கத்திற்கு, சர்வ தேசத் தமிழ்ச் சமூகம் தொடர்ந்தும் தனது ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்குமென உறுதியாக நம்புகின்றேன்.

தமிழீழத் தேசியத் தலைவர்
வே. பிரபாகரன்

## இந்த இதழில்

- சந்திரிகாவும் மூன்று அமைச்சர்களும்
- நிலாமுற்றம்
- ஒரு கதவு மூடப்படும்போது இன்னொரு கதவு திறக்கின்றது
- அந்தக்காலத்து அப்புவும் நவீனயுகப் பேரனும்
- நெப்போலியன் படைப் புரட்சி
- நிலவுப்பயண வெள்ளி விழா
- ☐ அயல்நாட்டுச் சிரிப்பு

இன்னும் பல அம்சங்கள்

22-08-1995
பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்

# உறுதி - பலம் - ஆதரவு

மூன்றாம்கட்ட ஈழப்போர் ஆரம்பமானதும் - ஓர் இடைவெளியின்பின்பு உலகத்தமிழர் மத்தியில் ஒரு புதிய உத்வேகமும் எழுச்சியும் தோன்றியுள்ளமையினை அவதானிக்கமுடிகிறது.

உலகில் தமிழர் வாழும் நாடுகளிலும் குறிப்பாக, தமிழ்நாட்டில் நடைபெற்றுவரும் தமிழீழப்போராட்ட ஆதரவு நடவடிக்கைகள் பலரின் கவனத்தை ஈர்த்துள்ளன

தமிழ்மக்களையும் விடுதலைப் புலிகளையும் பிரித்துவைக்க, பலவிதமான தந்திரோபாயங்களைச் 'சமாதானம்' என்ற போர்வைக்குள்மேற்கொண்ட சந்திரிகா அரசிற்கு இந்நிலைமைகள் மிகவும் கசப்பு மிக்கதாகவே இருக்கும்.

சந்திரிகாவினது 'சமாதானக் காலத்துத் தந்திரங்கள் பல, அவரின் வாயாலேயே இன்று வெளிவந்து கொண்டிருக்கின்றன. வெளிவராத பலவற்றை அவரது முன்னைய நண்பர்கள் (இன்றைய அதிருப்தியாளர்) இப்போது வெளியிட்டு வருகின்றனர்.

தமிழ்மக்களையும், விடுதலைப்புலிகளையும் பிரித்து வைக்கும் முயற்சியில் தோல்வியுற்ற சந்திரிகா, உலக நாடுகளில் இருந்து புலிகளை ஓரங்கட்டுவதற்கு, தீவிரப் பிரச்சார இயக்கமொன்றை நடத்தி வருகின்றார். அவையும் அவர் எதிர்பார்த்த பலனைத் தரவில்லை.

இவ்வேளையில்தான், உலகத் தமிழர்கள் பகிரங்கமாக விடுதலை புலிகளையும், தமிழீழப் போராட்டத்தையும் ஆதரித்துக் குரல் கொடுக்கத் தொடங்கியுள்ளனர். தமிழ்நாட்டில், மத்திய அரசின் நெருக்கடிகள் காரணமாக, சற்று ஓய்ந்திருந்த தமிழீழப் போராட்ட ஆதரவு அலைகள் இப்போது வெளிப்படையாக மீண்டும் எழுச்சி கொண்டுள்ளன.

அதேவேளை விடுதலைப் புலிகளின் இராணுவப்பலத்தையும், சிறீலங்கா அரசின் இயலாமையினையும் சிங்களப் புத்திஜீவிகள்சிலரே குறிப்பிட்டு வருகின்றனர்.

இவ்வாறானதொரு நிலை தற்செயலாக ஏற்பட்டதா என்பதை நாம் ஆராய்ந்து பார்க்கவேண்டும். தமிழ்மக்களின் உறுதியும், தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவ வெற்றிகளுமே இந்நிலைமைகளுக்குக் காரணம். எமது பலமும் வெற்றிகளுமே, தமிழீழத்திற்கான உலக அங்கீகாரத்தைப் பெற்றுத்தரும் என்பதுதான் யதார்த்தம்.

இந்தப் பலத்திற்கும், வெற்றிகளுக்கும் மேலும் மேலும் பலம் சேர்ப்பதே, எமது இலக்கினை விரைந்து வெற்றிகொள்வதற்கான வழி என்பதை, இக்கட்டத்தில் நாம் னைவரும் உணர்ந்து செயற்படுவது முக்கியமானதாகும்.

# முன்னோக்கிப் பாய்ச்சல் நடவடிக்கையும்
## அரசின் புதிய மூலோபாயமும்

யாழ் குடாநாடுமீது பாரிய தாக்குதல் ஒன்றை நடத்தி, தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டும் என்று சந்திரிகா அரசுக்கு ஒரு நீண்ட காலத் திட்டம் இருந்துவந்தது. ஆனால், அது எப்போது மேற்கொள்ளப்படும் என்பது தான் கேள்வியாக இருந்தது.

ஜூலை 08 ஆம் நாள் அன்று, இன்னும் சில தினங்களில் எமது நடவடிக்கைகள் தெரியவரும் என்று, சிறீலங்காவின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அநுருத்த றத்வத்த பாராளுமன்றத்தில் அறிவித்திருந்தார்.

இதே நாளன்று "வெண் தாமரை" இயக்கத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய சனாதிபதி சந்திரிகா, "பயங்கர வாதத்தைத் தோற்கடிக்கவே, அரசு யுத்தத்தில் ஈடுபடுகிறது எனவும், இதில் விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்படுவார்கள் என்றும் சூளுரைத்தார்".

மறுநாள் 09 ம் நாளன்று யாழ் குடாநாடு மீதான யுத்தம் தொடங்கப்பட்டது. வான்படை, கடற்படையின் உதவியுடன் சுமார் 15,000க்கும் மேற்பட்ட தரைப்படைகள் யுத்த டாங்கிகள், கனரக ஆயுதங்கள் சகிதமாக வலி மேற்கில் தமது போர் நடவடிக்கையைமேற்கொண்டனஇந்த நடவடிக்கைக்கு "முன்னேறிப் பாய்தல்" (Leap Forward) எனப் பெயரிடப்பட்டது. சிங்கள அரசின் இந்த இராணுவ நடவடிக்கையை "இன அழிப்பு நடவடிக்கை" என்று அழைப்பதே பொருத்தமானது.

ஐந்து தினங்களில் மட்டும், படையினரின் தாக்குதல்களால் சுமார் மூன்றரை இலட்சம் மக்கள் யாழ் நகரை நோக்கியும், தென்மராட்சியை நோக்கியும் இடம்பெயர்ந்தனர். 220 பேருக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். 375 பேருக்கு மேல் படுகாயமுற்றனர். பலர், அங்கங்கள் துண்டிக்கப்பட்டனர்.

இவ்வாறான மனிதப் படுகொலைகளை மறைத்தும், திரித்தும் சிறீலங்கா அரசின் தொடர்புச் சாதனங்கள் தகவல்கள் வெளியிட்டுக்கொண்டிருந்தன.

சிங்களப் பாதுகாப்பு அமைச்சர் அநுருத்த றத்வத்த "புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள யாழ் மையப் பகுதியை எமது கட்டுப்

பாட்டிற்குள் கொண்டுவருவதே எமது நோக்கம். எக்காரணம் கொண்டும், கைப்பற்றிய பகுதி களைவிட்டுப் படையினர் பின் வாங்கமாட்டார்கள்'' என வீர முழக்கஞ் செய்தார்.

சிங்கள அடிவருடி அமைச்சர் லக்ஷ்மண் கதிர்காமர், புலிகள் தோற்கடிக்கப்பட்டு விட்டனர் என்ற விதமான புளுகத்தில், ''இனிவரும் பேச்சுவார்த் தைகளில் விடுதலைப் புலிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படமாட் டாது ''எனத் துள்ளிக்குதித்தார்.

இன்னொரு முக்கிய அமைச்சர் ஜீ. எல். பீரிஸ், ''குடாநாட்டில் புலிகள் தோற்கடிக்கப்பட்டு, இரா ணுவம் வெற்றி பெற்றுவிட்டது. புலிகளிடம் பேசுவதற்கு இனி எதுவுமில்லை.'' என வெற்றிக் கூத்தாடினார். 13ஆம் நாள் இவர் கள் இவர்கள் இப்படிக் குதூகலித் துக்கொண்டிருந்தபோது, இருள் விலகாத அதிகாலை 1.30 மணி யளவில் இவர்களின் கனவுகள் கலைந்தன.

## பின்னோக்கிப் பாய வைத்த புலிப்பாய்ச்சல்

அதாவது – 14 ஆம் நாள் அதி காலை புலிகள் ஆவேசத்துடன் எதிரிகளை நோக்கிப் பாய்ந்தனர். முப்படையினரின் உதவியுடனும் கவசவாகனங்கள், பீரங்கிகளுட னும் முன்னேறிக்கொண்டிருந்த சிங்களப்படை நிலைகுலைந்தது. கவசவாகனங்கள் தகர்க்கப்பட் டன. பல படையினர் குண்டு



நவாலித் தேவாலயத்தில் 'புக்காரா' குண்டுவீச்சுப் படுகொலைகள்

பட்டு வீழ்ந்தனர். பல இராணுவத் தளபாடங்கள் புலிகள் வசம் வந்தன.

அத்தோடு-அன்று காலை 7.30 மணிக்கு சண்டிலிப்பாய்ப் பகுதிக்கு மேலான வான்பரப்பில் 26 வயதான ஃபிளைற் லெப். திலான் பெரேராவால் செலுத்தப்பட்டு, 8,000 அடிகள் உயரத்தில்-குண்டு பொழிய ஆயத்தமாக வந்து கொண்டிருந்த 'புக்காரா' விமானம், புலிகளின் விமானஎதிர்ப்புப் படையினரால் சுட்டு வீழ்த்தப் பட்டது. அந்த இளைய விமானியின் எரிந்து கருகிய உடலை மட்டும் எப்படியோ சிங்களப்படை எடுத்துச்சென்றது. விமானத்தின் சிதைவுகளைப் புலிகள் மீட்டனர். அன்றைய தினம் விடுதலைப் போராளிகள் 63 பேரின் விலை மதிப்பற்ற உயிர் அர்ப்பணத்தினால் சிங்களப்படை பின்வாங்கி ஓடியது.

புலிப்பாய்ச்சலின் தொடர்ச்சியாக, 10ம்நாள் சிறீலங்காக் கடற்படையின் பாரிய கட்டளைக்கப்பலான 'எடித்தாரா' கடற்புலிகளால் மூழ்கடிக்கப்பட்டது. தோல்விகண்ட சிங்கள அரசிற்கு, இக்கப்பலின் இழப்பு மேலும் தலையிடியைக் கொடுத்தது.

பலவித வாக்குறுதிகளை முன்வைத்து ஆட்சிப்பீடமேறிய சந்திரிகா அரசு, அதனை நிறைவேற்ற முடியாமல், சிங்கள மக்களிடமும், எதிர்க்கட்சிகளிடமும் சிக்கித் தடுமாறுகின்ற இவ்வேளையில், அதனைத் திசைதிருப்பும் முக்கிய நோக்கத்துடனேயே யாழ்ப்பாணம் மீதான யுத்தத்தை முடுக்கிவிட்டது.

தமிழீழத் தேசியத் தலைவரின் யுத்தத் தந்திரோபாயத்தினால் நுட்பமாக நெறிப்படுத்தப்பட்ட 'புலிப்பாய்ச்சல்' நடவடிக்கை, சந்திரிகா அரசுக்கு அரசியல் ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும் இன்று படுதோல்வியை ஏற்படுத்தியுள்ளது.

## சந்திரிகா அரசின் புதிய மூலோபாயம்

உண்மையில், யாழ்ப்பாணம் மீதான தாக்குதற்திட்டத்தில் சிங்களப் பேரினவாத அரசின் உள்நோக்கங்கள் பல புதைந்து கிடக்கின்றன. அதனால், படுதோல்வியுற்ற முன்னேறிப்பாய்தல் நடவடிக்கையுடன் யாழ். மீதான முற்றுகை முயற்சி முடிவடைந்துவிட்டது என எவரும் கருதக்கூடாது. இன்னுமோர் இராணுவ நடவடிக்கையை, மேலும் பெருமெடுப்பில் மேற்கொள்ள சிங்கள அரசு திட்டமிட்டு வருகின்றது. 15 ஆயிரம் படையினரை இருமடங்காக்கி, முன்னேறுவதற்குப் படைத்தலைமை திட்டமிட்டு வருகின்றமை புலப்படுகின்றது. அதற்கான நவீனஆயுதக் கொள்வனவுகளும் நடைபெற்றவண்ணமேயுள்ளன.

ஐக்கிய தேசியக்கட்சி அரசின் ஆட்சியின்போது கைக்கொள்ளப்பட்ட இராணுவ மூலோபாயங்கள் சந்திரிகா அரசினால் தற்போது மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. முன்னர், காலஞ்சென்ற சனாதிபதி பிரேமதாஸாவுடன் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்ற போது, ஒரு கட்டத்தில் தனிப்

பட்ட முறையில் விடுதலைப் புலிகளிடம், ''வடக்கு உங்களுடையது தான். கிழக்கை உங்களிடம் தருவதுதான் பிரச்சினை'' என்று, மெல்லிய சிரிப்புடன் பிரேமதாஸா கூறினாராம்.

வடக்கைவிட, கிழக்கைத் தன் பிடியில் வைத்திருக்க வேண்டும் என்பதே ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடாக இருந்தது. அதனால், கிழக்கு மாகாணத்தில் மூலைக்கு மூலை படையினர் முகாமிட்டுக் குவிக்கப்பட்டிருந்தனர். இன்று கிழக்கிலுள்ள பல இராணுவ முகாம்கள் மூடப்பட்டு வருகின்றன. அப்படியானால், கிழக்கைக் கைவிட்டுவிட அரசு நினைக்கிறதா? என்று நீங்கள் கேட்கலாம். அப்படி இல்லை; கிழக்கில் மூடப்பட்ட முகாம்களிலிருந்த ஆயிரக்கணக்கான படையினர் வடக்கிற்குக் கொண்டுவரப் படுகின்றனர்.

விடுதலைப் புலிகளின் முக்கியத் தளமாக, சகல நடவடிக்கைகளினதும் மையமாக, அரசாங்கம் வடக்கை – அதாவது யாழ்ப்பாணத்தையே கருதுகின்றது. எனவே, யாழ்ப்பாணத்தைக்கைப் பற்றினால், விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள ஏனைய பிரதேசங்கள் செயலிழந்துவிடும் என்பதே சந்திரிகா அரசின் எண்ணம் இதனடிப்படையிலேயே தற்போதைய இராணுவ மூலோபாயம் மாற்றம் பெறுவதாக அரசியல் – இராணுவ ஆய்வாளர்கள் கருதுகின்றனர். யாழ்ப்பாணத்தை முழுவதுமாகக் கைப் பற்றிவிட்டால், விடுதலைப் புலிகள் முற்றுமுழுவதுமாகத், தோற்கடிக்கப்பட்டுவிட்டனர் எனப் பிரசாரம் செய்வது அரசிற்குச் சுலபமானது. அதன் மூலம் சிங்கள மக்களின் ஆதரவைப் பெருக்கி, தற்போது எதிர்நோக்கும் பல சிக்கல்களிலிருந்து தப்பிக்கொள்ளலாம் என்பதும் சந்திரிகா அரசின் அரசியல் நோக்கம்.

இந்திய ஆக்கிரமிப்பு இராணுவம் இங்கிருந்த காலத்தில், காடுகளை மட்டுமே தளங்களாகக் கொண்டு, வியக்கத்தக்கமுறையில் அவர்களுடன் போரிட்டு வெற்றி கண்ட விடுதலைப் புலிகளின் போராட்ட வரலாற்றை ஆராய்ந்து பார்க்காத முட்டாள் தனமான நடவடிக்கையாகவே அரசின் புதிய மூலோபாயங்களைக் கருதவேண்டியுள்ளது.

கண்மூடித்தனமான இராணுவ நடவடிக்கைகள் மூலமாக, சாதாரணத் தமிழ் மக்களை அழித்தொழித்து, மேலும் இரத்த ஆறு தமிழ் மண்ணில் பெருக்கெடுக்க சந்திரிகா அரசால் வழிசமைக்க முடியுமேதவிர, விடுதலைப் புலிகளை அழித்தொழிக்கவோ, தமிழரின் போராட்ட உணர்வை மழுங்கடிக்கவோ முடியாது.

இவ்வேளையில் தமிழ் மக்கள், அரசின் அழிவு நடவடிக்கைகளில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வது முக்கியமானதாகும். விடுதலைப் புலிகளின் ஆட்பலத்தையும், ஆயுதப்பலத்தையும் பல மடங்கு அதிகரிக்கச் செய்வதே, பாதுகாப்பிற்கான ஒரேயொரு வழியாகவுள்ளது. இதுவே, தமிழ் மக்களின் இன்றைய வரலாற்றுக் கடமையும்கூட.

# நச்சு விதைகள்

போராட்டம் நிகழ்கின்ற தமிழ் மண்ணில் இயல்பாகவே பல மாற்றங்களும் நிகழ்ந்து வருகின்றன.

சமூகத்திலும், மக்களின் அன்றாடவாழ்வு நிலையிலும், தனிமனிதச் சிந்தனைகளிலும் குறிப்பிடத்தக்க விளைவுகளை இக்காலம் ஏற்படுத்தியுள்ளது.

போராட்டத்தினோடு-போர்ச்சூழலோடு இசைவாக்கம் பெற்று வாழ்க்கை நகர்கிறது. தொடக்கத்தில் கடினமாக இருந்த 'போர்க்கால வாழ்வு பின்பு சாதாரணமாகி விட்டது.

'வறுமையிலும் செம்மை' என்று குறிப்பிடப்படுவதுபோல, மரணத்தினுள்ளும் மகிழ்ச்சியுடன் வாழக்கற்றுக் கொண்ட ஒரு மக்கட் சமுதாயத்தைத் தமிழர் பிரதேசத்திற் காணலாம்.

பலமைல் தூரங்களை மிதி வண்டிகளிற் கடப்பதும், குப்பிவிளக்கின் வெளிச்சத்தில் தேடல் புரிவதும் இன்று அசாதாரணமான காரியங்களல்ல.

வாழ்விலும், சிந்தனைகளிலும் குடிகொண்டிருந்த சிறுமைத்தனங்கள் எல்லாம் போராட்டப் புயலில் அடிபட்டுப் போகின்றன.

எனினும்,

இவ்வாறான தொரு கால வோட்டத்தினாலும் மாற்றம் பெறாத - எக்காலத்திலும் சவாலாகவே நிற்பது போன்ற தோற்றத்துடன் முகங்காட்டும் சில தீமைகள் இன்னும் வாழ்ந்து கொண்டு தானிருக்கின்றன.

இத்தீமைகளிற் பல கல்வியுலகிலும், கற்றோர் சமூகத்திலும் காணப்படுகின்றன என்பது தான் கசப்பான ஒரு செய்தியாகும்.

இதில், 'றாக்கிங்' என்றழைக்கப்படுகின்ற வன்முறை முக்கியமானது. மேலைநாட்டுக் கல்வி நிறுவனங்களினால் அறிமுகஞ் செய்யப்பட்ட அச்செயற்பாடு, இன்று அங்கேயே மாற்றமடைந்து விட்ட சூழலில், இங்கு அது வளர்ச்சி பெறுவதென்பது கவலைக்குரியதாகும்.

எமது பல்கலைக்கழக மாணவர் உலகில் தவிர்க்க முடியாத ஒரு 'பண்பாட்டு அம்ச' மாக,

இந்த 'ராக்கிங்' நிலைகொண்டுவிட்டது என்றே எண்ணத் தோன்றுகிறது.

இவ்வன்முறையைக் கண்டிப்பவர்களையும், தடுக்க நினைப்பவர்களையும், தங்கள் 'சுதந்திரத் திற், கைவைப்பவர்களாக' சம்பந்தப்பட்டவர்கள் கருதுகின்றனர்; கிளர்ந்தெழுகின்றனர்.

இந்தச் 'சுதந்திர வீரர்கள்' பல்கலைக்கழக வளாகத்தில் வண்டில்ஒன்றைத் தீயிட்டுக்கொளுத்தி, வீர சாதனை' புரிந்த நிகழ்வை அனைவரும் அறிவர்.

அண்மையில், வீதியோர மதில்களில் காணப் பட்ட சில சுவரொட்டிகள், இவர்கள் நிகழ்த்தும் 'வீரகாவியங்கள்' குறித்து விளங்கப்படுத்தி யுள்ளன.

பல்கலைக்கழகம் என்பது சமூகத்திற்கப்பாற் பட்ட ஒரு தனியுலகம் என எண்ணிக்கொண்டு, வன்செயல்களில் ஈடுபடுவோரின் உணர்வுகளை ஒரு வித உளவியற்கோளாறு என்றே கொள்ளலாம்.

பல்கலைக்கழகம், குறிப்பிட்ட ஒரு சாரா ருடைய தனியுலகமல்ல. அது ஒரு சமூக நிறுவனம்



# நிலாமுற்றம்

— விவேக்

சமூக அக்கறைகள் அங்கு வளர்த்தெடுக்கப்பட வேண்டும்.

உயர் தொழில் வாய்ப்புக்களைப் பெறுவதற்கான கல்விச் சான்றிதழ்களை வழங்கும் ஒரு நிறுவனமாக மட்டும் பல்கலைக்கழகங்கள் இயங்குதல் கூடாது.

அண்மையில், பேராதனைப் பல்கலைக்கழகத்தில் 'றாக்கிங்' இல்ஈடுபட்ட இருமாணவர்கள் இடைநிறுத்தப்பட்டமையும், பதினொரு மாணவர்கள் விசாரணைக்குட்படுத்தப்பட்டமையும் பத்திரிகையில் வந்த செய்தி. இங்கும், 'றாக்கிங்' குறித்து, கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இது இவ்வாறிருக்க, சில தனியார் கல்வி நிறுவனங்களிலிருந்துவரும் செய்திகள் எமது காதுகளில் ஊசியேற்றுகின்றன.

குறிப்பிட்ட சில தனியார் கல்விநிறுவனங்களிற் கற்பிக்கும் குறிப்பிட்ட சில ஆசிரியர்கள், தென்னிந்திய சினிமாப்படங்களில் உரையாடப்படும் அருவருப்பான இரட்டை அர்த்த வசனங்களை (அவ்வாறான சினிமாக்கள் தடை செய்யப்பட்டதாலோ, என்னவோ) தாங்கள் குத்தகைக்கு எடுத்துக் கொண்டுள்ளனர்.

குறிப்பாக, மாணவிகளைத் தலைகுனிய வைக்கும் இவ்வாறான வசனங்களை, தந்தை வயதுகளில், உள்ள சில ஆசிரியர்களே, தங்கள் பிள்ளைகள் போன்ற இளசுகளிடம் கூறுகின்றனர்.

இளைய மனங்களில் நஞ்சைவிதைக்கும் கீழ்தரமான திரைப்படங்களும், நூல்களும் தடுக்கப்பட்டுள்ள இச்சூழலில், அவற்றின் வேலையைக் கல்வி நிறுவனங்கள் செய்வது கவலைக்குரியது.

இவ்வாறான சமூகத்தீமைகள் இன்றைய காலத்தால் தாமாகவே களைந்து போகாவிடின், கடுமையான நடவடிக்கைகளின் மூலம் அவறைக் களைந்தெறிவது அவசியமானதாகும்.

# விற்றமின்கள்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி......)

**IV) குறைபாடுகள்:-**

செங்குருதிக் கலங்கள் அதிகளவில் சிதைவடையும்.

## விற்றமின் K (Phylloquinone and Menaquinone)

**I) காணப்படும் உணவுப்பொருட்கள்:-**

பச்சை மரக்கறிகள் விசேடமாக முட்டைக்கோவா, பட்டாணி, சோயா அவரை, ஈரல், முட்டை, பழங்கள், தானிய உணவுகள்.

**II) தொழில்:-**

புறோத்துறொம்பின் (Prothrombin) மற்றும் பல குருதி உறைதற் பதார்த்தங்கள் என்பனவற்றின் உற்பத்திக்கு அத்தியாவசிய மானது. குருதி உறையும்நேரத்தைக் குறைப்பதால் குருதிப்பெருக் கைக் கட்டுப்படுத்தல், கலங்களில் சக்தி வெளிவிடப்படுவதற்கு உதவுகின்றது.

**III) இயல்புகள்:-**

இவை பற்றீரியாக்களினால் தொகுக்கப்படமுடியும்.

**IV) குறைபாடுகள்:-**

a) குருதி உறைவதற்கு அதிகநேரம் எடுத்தல்.

b) ஈரலில் பாதிப்பை ஏற்படுத்தல்.

## நீரிற் கரையும் விற்றமின்கள்

### விற்றமின் $B_1$ (Thiamin)

**I) காணப்படும் உணவுப் பொருட்கள்:-**

தானியங்களின் மா, பாண், பால், முட்டை, ஈரல், இதய சிறுநீரகம், மீன், அவரை, பட்டாணி, தோடம்பழம், தவிடு மரக்கறிகள் மதுவம் (Yeast)

## II) தொழில்:-

a) காபோவைதரேற்று அனுசேபத்தில் முக்கியபங்கு வகித்தல்.
b) சாதாரணச் சமிபாட்டினையும் பசியினையும் பேணுவதற்கு அவசியம்
c) நரம்புத் தொகுதியின் ஆரோக்கியத்திற்கு உதவுதல்.
d) பெரிபெரி (beri beri) நோய் ஏற்படாது தடுத்தல்.

## III) இயல்புகள்:-

மிகையான வெப்பத்தினால் அழிவடையுந் தன்மையுடையன. உடலில் சேமிக்கப்படுவதில்லை.

## IV) குறைபாடுகள்:-

a) பசியின்மை ஏற்படல்.
b) மாப்பொருள், வெல்லங்களின் சமிபாடு பாதிக்கப்படும்.
c) பெரி - பெரி நோய் ஏற்படல்.
d) மலச்சிக்கல் அல்லது வயிற்றோட்டம் ஏற்படல்.
e) பெருங்குடலில் அழற்சி ஏற்படல். (Colitis)
f) நரம்புகளில் அழற்சி ஏற்படல். (Neuritis)
g) உடல் மிகவும் மெலிவடைதல்.
h) குழந்தைகளில் குன்றிய வளர்ச்சி ஏற்படுதல்.
i) தசைகள் ஒருங்கிணைந்து செயற்படுந்தன்மையை இழத்தல்.
j) மனிதரில் உடற்பாகங்கள் செயலிழத்தல் (Paralysis)

## 2. விற்றமின் - $B_2$ (Riboflavin):-

## I) காணப்படும் உணவுப் பொருட்கள்:-

தானியங்களின் மா, பாண், பால், முட்டை ஈரல், மீன், மரக்கறிகள் சிறுநீரகம், மதுவம் (Yeast)

## II) தொழில்:-

(a) சாதாரண வளர்ச்சிக்கு உதவுதல்.
(b) சில நொதியங்களின் உருவாக்கத்திற்கு முக்கியமானது.
(c) காலத்தில் நடைபெறும் ஒட்சியேற்றத் தாக்கத்திற்கு அவசியம்.
(d) நாக்கில் ஏற்படும் அழற்சி, கடைவாய் வெடித்தல் என்பவற்றைத் தடுத்தல்.
(e) ஒளியின் இசைவாக்கத்தில் பங்கெடுத்தல்.

## III) இயல்புகள்:-

சாதாரணமாக உணவு சமைக்கும் பொழுதும் உணவு தயாரிக்கும் செயன்முறைகளின் போதும் வெளிவிடப்படும் வெப்பத்திற்குத் தாக்குப் பிடிக்கும் தன்மையுடையது. அற்க கோலில் கரையும். வெளிச்சத்திற்கு உறுதியற்றது.

## IV) குறைபாடுகள்:-

(a) வளர்ச்சி பாதிக்கப்படல்.
(b) கடைவாய்ப் பகுதிகளில் வெடிப்பு ஏற்படல்
(c) நாக்கில் அழற்சி ஏற்படல்.
(d) விழிவெண்படலத்தின் ஒளியை ஊடுபுகவிடுந் தன்மையில் பாதிப்பு ஏற்படுதல்.
(e) தோலில் அழற்சி ஏற்படுதல்.
(f) களைப்பு, பலவீனம் ஏற்படும்.
(g) குருதிச் சோகை ஏற்படும்.
(h) வெளிச்சத்தைப் பார்க்க இயலாதிருத்தல்.

*(மிகுதி அடுத்த இதழில்)*

---

- மனித உடலில் ''பதாங்க உறுப்புக்கள்'' என அழைக்கப்படும் தொழிற்பாடற்ற உறுப்புக்கள் 90 உள்ளன. குடல் வளரி, வாற்பகுதி (குயிலலகு என்பு), காதுச்சோணைகள், ஆண்களின் மார்புச் சுரப்பிகள, வேட்டைப் பற்கள் போன்றவற்றையே பதாங்க அமைப்புக்கள் என்பர்.

- உலகின் மிக இலேசான உலோகம் இலிதியம். அதிக பாரமானது ஒஸ்மியம். ஒரு கன. செ. மீ. இலிதியத்தின் நிறை 0·543 கிராம். ஆனால், அதே அளவு ஒஸ்மியத்தின் நிறை 22.48 கிராம்.

- முதலாவது அணுகுண்டு நியுமெக்சிக்கோ பாலை நிலத்தில் 1945ஆம் ஆண்டு ஜூலைமாதம் 16 ஆம் திகதி வெடிக்கவைக்கப்பட்டது.

மனிதன் நிலவில் கால்பதித்து, 25 வருடங்கள் கடந்துவிட்டன. 1969 ஜூலையில் அமெரிக்காவின் 'அப்பலோ 11' சந்திரனில் தரையிறங்கியது. நீல் ஆம்ஸ்ட்ரோங், அல்ட்றின் எனும் இருவிண் வீரர்கள் மனித குலத்தின் காலடித் தடயத்தைப் பதித்தார்கள். மற்றொரு விண்வெளி வீரரான கொலின்ஸ் விண்கலத்திலேயே இருந்து கண்காணித்தார். பின்னர் மூவரும் வெற்றிகரமாக மண்ணிற்குத் திரும்பினர். இந்தப் பயணத்திற்கு அமெரிக்கா செலவழித்த தொகை சுமார்80,000 கோடி ரூபாய் ஆகும்.

# நிலவுப் பயண வெள்ளி விழா

'அப்பலோ- 11' இன் பயணம் விண்வெளி ஆய்வில் பெரிய முன்னேற்றம் எதையும் ஏற்படுத்தியதாகக் கூற முடியாது. சந்திரனில் இருந்து 21 கிலோ எடையுள்ள பாறைகளை அப்பலோ-11 சுமந்து வந்தது. இந்தப் பாறை, மண் இவற்றைச்சோதிக்கும்போது, பூமி எப்படித் தோன்யது என்றவரலாறு கிடைத்துவிடும் என்று புவியியல் நிபுணர்கள் நம்பினர். ஆனால், அவர்களது நம்பிக்கை பொய்த்துவிட்டது. ஏனென்றால், எடுத்து வரப்பட்ட பாறைகள் சந்திரனின் அமைப்பை வெளியிடுந் தன்மை கொண்ட 'ஜெனிரிக்' பாறைகளாக இல்லை. ஆனால், அப்பலோ-11 பயணத்தின் மூலம் கிடைத்த வெற்றி, விண்வெளி ஆய்வில் அமெரிக்காவின் திறனை மேம்படுத்தியது.

விண்வெளியில் இருந்து மற்றக் கிரகங்களைத் தொலைநோக்கி மூலம் ஆய்வு செய்வதற்காக, 'ஹப்பிள்' என்றதொலைநோக்குச் செயற்கைக்கோளை அமெரிக்கா அனுப்பியது. விண்வெளியில் 'ஹப்பிளின்' தொலைநோக்கி பழுதடைந் ததால், அதனுடைய நோக்கமே நிறைவேறாத நிலையில் வெறுமனே சுற்றி வந்து கொண்டிருந்தது. அந்த ஹப்பிளின் தொலைநோக்கியை, இப்போது அமெரிக்க விஞ்ஞானிகள் விண்வெளிக்கே சென்று பழுது பார்த்துவிட்டுத்திரும்பியிள்ளனர். இப்போது ஹப்பிளின் தொலைநோக்கிகள் சிறப்பாக இயங்குகின்றன. 'ஜூபிரர்' கிரகத்தோடு மோதிய 'ஷூமேக்கர்-லெவி'யைப் படம் பிடித்து ஹப்பிள் அனுப்பிய படங்கள் வானியல் ஆய்விற்குப் பெரிதும் உதவியுள்ளன.

பூமியின் துணைக்கிரகமான சந்திரனைப் பற்றிய ஆய்வுகள், மற்றும் வெளியே இருக்கின்ற நட்சத்திரங்களைப் பற்றியும் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. வழக்கமான தொலைநோக்கி, மற்றும் படங்கள் போன்றவற்றை மட்டுமே நம்பியிராது, அறிவியல் நிபுணர்கள் இப்போது பிற கிரகங்களில் இருந்து வரும் மின்காந்த சமிக்ஞைகள், அயனிகள், காமாக் கதிர்கள், லேசர் கதிர்கள் போன்றவற்றைக் கூட ஆய்வுப் பொருள்களாகப் பயன் படுத்தும் அளவுக்கு வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

நன்றி 'மனோரமா இயர்புக்'.

# பகலவன் பதில்கள்

தே. மன்மதன்
நந்தவனம்,
கோப்பாய்.

● நாட்டைக்காக்கப் போர் நடக்கும் இவ்வேளையில் சில விஷமிகள் பாடசாலைகள், கல்வி நிறுவனங்கள் இனி இயங்காது என வதந்திகள் பரப்புகின்றனரே; இவர்களுக்கு ஏன் இந்த வேலை?

△ உண்மைச்செய்திகள் சில சமயம் ஊர்ந்து தான் செல்கின்றன. வதந்திகள்தாம், இறக்கை கட்டிப்பறக்கின்றன. எனவே, இவ் வேளையில் வதந்திகள் குறித்தும், அதனைப் பரப்பும் விஷமிகள் குறித்தும் அவதானமாக இருக்க வேண்டியமை அனைவரினதும் கடமை.

பு. ஈழநாதன்
உடுப்பிட்டி அ.மி. கல்லூரி

● எமது பிள்ளைக்கு ஆங்கிலம் மட்டும்தான் தெரியும் என, பெருமை பொங்கக்கூறும் அந்நிய நாட்டில் வசிக்கும் தமிழர்கள் பற்றி ஒரு பழமொழி கூறுங்கள்?

△ பழமொழியை முந்திகொண்டு உணர்ச்சிக்கவிஞர் காசிஆனந்தனின் பாடலில் வரும் கேள்வி ஒன்று தான் நினைவிற்கு வருகின்றது.

'வெள்ளைக்காரன் தான் உனக்கு அப்பனா'

வே. தவச்செல்வன்
பளை மத்திய கல்லூரி.

● சமாதானமுன்னெடுப்பில் சந்திரிகாஅரசு தனது அசமந்தப் போக்கைக் காட்டிவிட்டது. ஆனால், காலவோட்டத்தில் மீண்டும் சமாதானப்பாதையில் திரும்ப, தென்னிலங்கை மக்கள் அழுத்தம் கொடுப்பார்களா?

△ சண்டையில் கிடைக்கும் அடிகள்தாம், அரசிற்குச் சமாதானத்திற்கான அழுத்தத்தைக் கொடுக்கும்.

வே. சசிகலா
கைதடி வடக்கு

● 'சாளரம்' என்பதன் அர்த்தம் என்ன? அந்தப் பெயரைத் தேர்ந்தெடுத்தமைக்கான காரணம் யாது?

▽ மூடப்பட்ட ஓர் அறைக்குள்ளோ, வீட்டிற்குள்ளோ உங்களால் அதிக நேரம் இருக்க முடியுமா? காற்றும், ஒளியும் அத்தியாவசியமானவை அல்லவா. அக்காற்றையும் ஒளியையும் உள்ளே வரவழைப்பது ஜன்னல்; அதாவது, சாளரம். அறிவையும், பலதரப்பட்ட கருத்துக்களையும் உங்களுக்கு வரவழைப்பது 'சாளரம்' இதழ்! என்ன, பெயர் பொருத்தம் தானே?

சு. சுரேஸ்காந்
வெற்றிலைக்கேணி,
பரமேஸ்வரா வித்தியாலயம்.

● பேச்சாளர்கள் மேடையிற் கடைப்பிடிக்க வேண்டிய முறைகள் பற்றிக் கூறுவீர்களா? ஏனென்றால், நாங்களும் வருங்காலப் பேச்சாளர்கள் அல்லவா!

△ முடிந்தால், யாழ்ப்பாணத்தில் நடக்கும் இலக்கியம் தொடர்பான நிகழ்ச்சிகளுக்கு வருகை தாருங்கள். அங்கு பல பேச்சாளர்கள் பேசுவார்கள். பேச்சாளர்கள் கடைப்பிடிக்கக்கூடாத முறைகள் பற்றி நிறையத் தெரிந்து கொள்ளலாம். பின்பு, கடைப்பிடிக்க வேண்டிய முறைகள் பற்றி நீங்களே முடிவெடுப்பது சுலபமானதாக இருக்கும்.

சி. தர்ஷிபன்
ஹாட்லிக்கல்லூரி,
பருத்தித்துறை.

● பகலவனே! தமிழ் மக்கள் பற்பல ஆர்ப்பாட்டப்பேரணிகளை அரசுக்கெதிராக நடத்துகிறார்கள். இங்கு இப்படியான பேரணிகள் நடப்பதை சிறீலங்கா அரசு விழித்துப் பார்க்கிறதா?

△ சிங்கள அரசு விழித்துப்பார்க்கிறதா? கேட்கிறதா? என்பது எமக்குப்பிரச்சினை அல்ல. எமது எதிர்ப்புணர்வை உலகிற்குக் காட்ட, ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் பொருத்தமான காரியங்களைச் செய்தே ஆக வேண்டும்.

---

☐ *மனிதரின் கண்ணீருக்கு, கிருமிகளைக் கொல்லும் சக்தி உண்டு. கண்ணீரில் 'லைசோசெம்' என்னும் ஒருவகை இரசாயனபபொருள் ஏராளமாகக் காணப்படுகின்றது. இவையே, கிருமிகளைக் கொல்லும் சக்தி உடையவை.*

---



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்

# நெப்போலியன் படைப் புரட்சி

18ஆம் நூற்றாண்டில் படைகள் அளவில் சிறியனவாகவும், அது ஒரு வாழ்க்கைத்தொழில் முறையாகவும், பராமரிப்புச்செலவு கூடியனவாகவும் இருந்தன. மோதலின்போது களத்தில் படைவீரர்களை இழப்பது, பெரிதும் நட்டமான விடயம் என்பதால், போர் நடவடிக்கைகள், பெரிதும் சுற்றிவளைத்து முற்றுகையிட்டு அடக்குவதே தந்திரோபாயமாக இருந்தது. பெரிய அளவிலான கட்டாய இராணுவச் சேவை முறைகளின் கீழ் திரட்டப்பட்ட பெரிய படைகளுடனும், நெப்போலியனின் திறமையின் கீழ் திறம்படப் பயிற்றப்பட்ட படைவீரர்களுடனும், பிரான்ஸ் புதிய அமைப்புக்களையும் தந்திரோபாயங்களையும் புகுத்தத் தொடங்கியது.

நெப்போலியன் எப்பொழுதும் முழுமுற்றான வெற்றியையே நாடியதுடன், தனது படையினரை எதிரியின் பலக் குறைபாடு உள்ள இடத்திலேயே ஒருமுகப்படுத்தித் தாக்குபவனாக இருந்தான். அவன் தனது படைகளை 25,000 தொடக்கம் 30,000 வரை வீரர்கள் கொண்ட படையணிகளாகப் பிரித்தான். இப் படையணிகளைப் பரந்தளவில் நிறுத்தி, குழப்பமான நிலையில் எதிரியை எங்கிருந்து தாக்குதல் வருமோ என்ற ஊகிக்கச் செய்து, தீர்மானமான தாக்குதல் வேளை வந்ததும் படை அனைத்தையும் ஓர் அணியில் திரட்டித் தாக்குவது, அவனுடைய தந்திரமாக இருந்தது.

விரைந்து படை நடவடிக்கைகளை நடத்துவதில் நெப்போலியன் வல்லவன். அதற்கேற்றவாறு வளைந்து கொடுக்கும், படை நகர்த்தும் முறையையும் விருத்தி செய்தான். அத்துடன், அவனது படைகள் முன்னேறிச் செல்லும்போது, அதை அண்டிய நிலத்தில் வாழ்ந்திருப்பதும் ஒரு தந்திரமாக இருந்தது. எனினும், ஏழைமை நாடான ரஷ்யா போன்ற இடங்களில் இந்த முறை, நெப்போலியனின் படைகளைப் பலவீனமடைய வைப்பதாக இருந்தது.

நெப்போலியனின் அணுகுமுறையின் வெற்றி, திறமையான செய்தித்தொடர்பு, விநியோக முறை என்பவற்றுடன், புதிய படைவீரர்களை இணைத்ததாலும், படையினர் மத்தியில் அவனுக்கு இருந்த பிரபயத்தாலும் கட்டி

யெழுப்பப்பட்டது. அவன், அடி மட்டத்தில் இருந்து பதவி உயர்வு வழங்கும் முறை ஒன்றைப் புகுத்தினான். அவனுடைய பல தளபதிகள் அந்தவழியில் பதவியுயர்வு பெற்று வந்தவர்களாவர். அவனது தளபதிகளில், பெருஞ் சாதனை படைத்த பெருவீரன் மார்ஷல் நே (1769-1815) அந்த வழியில் உயர்ந்து வந்தவராவார்.

## நெப்போலியன் சட்ட நடைமுறைக் கோவை

புரட்சியின் நிரந்தரமான சாதனைகளில் ஒன்றாக, நெப்போலியனின் சட்ட நடைமுறைக் கோவை அமைந்தது. பிரான்சில் 1789 ஆம் ஆண்டு முதல் ஆக்கப்பட்ட பெருந் தொகைச் சட்டங்களை, ஒரு சட்டவாக்கக் கோவையாக ஆக்குவது 1792ஆம் ஆண்டில் தொடங்கியது. 1804 இல் முடிவடைந்த அக்கோவைக்கு நெப்போலியனின் சட்ட நடைமுறைக்கோவையென 1807 இல் மறு பெயரிடப்பட்டது. 1789 ஆம் ஆண்டின் மனிதச் சமுகச் சமத்துவத்தை வற்புறுத்திய கோட்பாடுகளைக் சட்ட விதிகளுக்கமையக் கொண்டிருந்த அக்கோவை, மதச் சகிப்புத் தன்மை, மானிய முறை உரிமை ஒழிப்பு என்பவற்றையும் கொண்டிருந்தது. எனினும் சொத்துரிமை பற்றி அதிகளவில் அது வலியுறுத்துவது, பயங்கரத்தின் பின்பும் பிரெஞ்சு மக்களின் அரசியல்வாழ்விலுள்ள பழைமைவாதத்தைப் பிரதிபலிக்கிறது. இது, கணவன்மாரினதும், தந்தைமாரினதும் உரிமைகள் பற்றி அழுத்திக் கூறுகிறது அதே வேளை பெண்கள்ளி தகுதி. நிலையை அது குறைத்துள்ளது. இது, நெப்போலியனின் தனிப்பட்ட கருத்தைப் பிரதிபலிக்கின்றது.

2251 சட்டங்களைக் கொண்டுள்ள சிறிய தொகுதியான அந்தக் கோவை, புரட்சியின் அடிப்படைக் கோட்பாடுகளை ஐரோப்பா எங்கும் பரப்புகின்றது. அதிக நாடுகள் அதில் ஆர்வம் காட்டாவிட்டாலும், நெப்போலியன் தனது சாம்ராஜ்யத்துடன் இணைக்கப்பட்ட நாடுகளில் அந்தச் சட்டக் கோவையை நடை முறைப்படுத்தினான். அந்தக் கோவை, அவனில் தங்கியுள்ள நாடுகளாலும் அவனது நேசநாடுகளாலும் கடைப்பிடிக்கப்பட்டது. நெப்போலியனின் வீழ்ச்சிக்குப்பின்னும் அந்தச் சட்டக்கோவை பல நாடுகளில் இருந்து வந்ததோடு அந்த நாடுகளின் தேசிய வாழ்வில் முக்கிய பங்கும் வகித்து வந்தது. போருக்கு முன்னர், பல விதமான சட்டங்களால் பிரிந்துபோன நாடுகள் ஐக்கியப்படவும் அது உதவியுள்ளது. இப்படியாக, அது புரட்சியினது நிரந்தரமான தாக்கத்தை உறுதிப்படுத்தியுள்ளது.

— நவரதன்

# அயல்நாட்டுச் சிரிப்பு

☐ யாருடைய தொழில் மிகவும் பழைமைவாய்ந்ததுஎன, ஒரு மருத்துவரும் ஓர் அரசியல் வாதியும், ஒரு கலைஞரும் உரையாடிக்கொண்டிருந்தனர்.

''உலகின் முதற்பெண்ணான ஏவாள், ஆதாமின் இடுப் பெலும்பினால் உருவாக்கப் பட்டாள். கண்டிப்பாக இது ஒரு மருத்துவ அறுவைச் சிகிச்சை. ஆகவே, எங்கள் தொழில் தான் பழைமை யானது'' என்றார் மருத்து வர்.

''ஆனால், அதற்கு முன்னால் இந்த உலகம் குழப்பமாக இருந்திருக்கிறது. குழப்ப மான இவ்வுலகத்தை ஒழுங்கு படுத்தியது ஒரு கலைஞன் தான். ஆகவே, எங்கள் தொழில் தான் பழைமை யானது'' என்றார் கலைஞர்.

''உலகம் குழப்பமாக இருந் தது என்கிறீர்களே; குழப்பத் தைத் தோற்றுவித்தது யார்? நாங்கள் தான்'' என்றார் அரசியல்வாதி சிரித்துக் கொண்டே. ☐

☐ ஒருவழிப் பாதையில் காரை ஓட்டிக்கொண்டு வந்த ஒரு வனைப் பொலிஸ்காரர் நிறுத்தினார். காரோட்டி யின் பக்கத்தில் அவனது மனைவி அமர்ந்திருந்தாள்.

''ஒருவழிப் பாதையினூடாக வாகனத்தில் வருவது குற்றம் என்று உனக்குத் தெரி யாதா?'' என்றுகேட்டார் பொலிஸ்காரர்.

''அது என்னவோ எனக்குத் தெரியாது. எனக்கு நல்லகண் பார்வை உண்டு. அதனால், விளக்கு இல்லாத இந்த வாகனத்தை ஓட்டுகிறேன். நன்றாக வாகனம் ஓட்டும் எனக்கு ஏன்'லைசன்ஸ்'? அத னால், இதுவரை அதுவும் எடுக்கவில்லை'' என்றான் காரோட்டி.

''ஒன்றுக்கு மூன்று குற்றங்கள் செய்திருக்கிறாய். இதற்காக, நான் உன்னைக் கைது செய் யப்போகிறேன்'' என்றார் பொலிஸ்காரர்.

தன் கணவனுக்கு உதவ எண் ணியமனைவி, ''இவர் சொல் வதை நம்பாதீர்கள். நன்றா கக் குடித்துவிட்டால், இவர் இப்படித்தான் உளறுவார்'' என்றாள். ☐

☐ *விருந்தினர்:-* உங்கள் வீட்டு நாய் நான் சாப்பிடுவதையே ஏன் முறைத்துப்பார்த்துக் கொண்டிருக்கிறது?

*வீட்டுக்காரர்:-* நீ அதனுடைய தட்டில் சாப்பிடுவதை எப் படியோ கண்டுபிடித்துவிட் டது. அதனால்தான்.

□ கல்லூரி ஒன்றில் அந்த அமைச்சர் பேசவேண்டியிருந்தது. ஆங்கிலம் அதிகம் தெரியாத அவர், தன் உதவியாளரிடம் பதினைந்து நிமிட ஆங்கிலப் பேச்சை எழுதித் தருமாறு சொன்னார்.

கூட்டத்தில் அதனை அரை மணிநேரம் படித்தார் அவர். பிறகு உதவியாளரிடம், ''கால்மணி நேரப்பேச்சைத் தயாரிக்கச் சொன்னேன். நீ ஏன் அரை மணி நேரப் பேச்சைத் தயார் செய்தாய்''? என்று கோபத்துடன் கேட்டார் அவர்.

''ஐயா!நான் கால்மணிநேரப் பேச்சுத்தான் தயார் செய்தேன். அதன் நகலையும் சேர்த்து நீங்கள் படித்துவிட்டீர்கள்'' என்றார் உதவியாளர். □

□ இரவுநேரம் கணவனும் மனைவியும் அவர்களது வீட்டில் உணவருந்திக் கொண்டிருந்தார்கள். திடீரென்று மின்சாரம் நின்றுவிட்டது. அவரது மனைவி மெழுகுவர்த்தியை ஏற்றி மேசையின் மேல் வைத்தார். இருவரும் சாப்பிடத் தொடங்கினர்.

''ஒரே புழுக்கமாக இருக்கிறது. மின் விசிறியைப் போடட்டுமா?'' என்று கேட்டான் கணவன்.

அதற்கு மனைவி, ''என்ன முட்டாள்தனமாகப் பேசுகிறீர்கள். விசிறியைப் போட்டால், மெழுகுவர்த்தி அணைந்துவிடாதா? பிறகு இருட்டில் எப்படி நாம் சாப்பிடுவது? ''என்று கேட்டாள். □

---

## இவரும் ஓர் எழுத்தாளர்?!

**மகன்:–**
என்னப்பா இன்னும் கதை எழுதவில்லையா? இப்பவும் கற்பனையா செய்து கொண்டிருக்கிறீர்கள்?

**எழுத்தாளர்:–**
கதை எழுத விஷயதானம் (ஐடியா) வருகுதிலையே மகனே

**மகன்:–**
நான் சொன்ன இந்தியன் ஆமிக்காரங்களின் கொலைச் சம்பவங்களைக் கதையாக எழுதலாம்தானே அப்பா.

**எழுத்தாளர்:–**
இந்தியன் ஆமி மாமாக்கள் இன்னுமொருமுறை வருவார்கள்போல் இருக்கிறது. வந்து போனாப்பிறகு ஒரேயடியாக எழுதலாம் மகனே.

**மகன்:–**
என்னப்பா புலி மாமாக்கள் வந்த பிறகு எழுதுவோம் என்ற முந்திச் சொன்னீர்கள். அவர்களதான் இப்போது இங்கு எமக்காகப் போராடுகிறாாகளே! இப்ப இப்படிச் சொல்லுறீங்களே ...........

**எழுத்தாளர்:–**
? ? ? அம்மா வரட்டாம். போடா போய்ச் சாப்பிடு...

# ஒரு கதவு மூடும்போது, இன்னொரு கதவு திறக்கின்றது.

"இருண்ட தினத்தை மறு நாள் வரை வாழ்ந்து விட்டால், அடுத்தநாள் தானாகவே கழிந்து போகும்'' என்று, வில்லியம் கூப்பர் பல ஆண்டுகளுக்கு முன்பு எழுதினார்.

இது அன்றும் உண்மை, இன்றும் உண்மை.

நம் எல்லோருடைய வாழ்க்கையிலும் இருண்ட நாட்கள் உண்டு. ஒவ்வோர் இருண்ட நாளும் கழியத்தான் போகிறது. அழுத்தமான சோகங்களை நம் மீது திணிக்கின்ற வாழ்க்கை, மென்மையான அன்பினால் அந்தச் சோகங்களையும் துடைக்கவே செய்கிறது. இருண்டநாள் கழிந்து, புதியநாள் உதயமாகிறது.

நம்முடைய இருண்ட நாட்கள் கடந்து போய், அதன் சோகங்கள் கொஞ்சம், கொஞ்சமாக மறதிக்குள் புதையட்டும். ஒவ்வொரு நாளும் கடந்த கால இருளைப் புதுப்பித்துக் கொண்டே இருக்காதீர்கள். இறந்து போன கடந்தகாலம், இறந்ததைப் புதைக்கட்டும்.

உலகில் எதுவுமே எப்போதும் நீடிப்பதில்லை. தொல்லைகள் கூட, நாமாகப் புதுப்பிக்காவிட்டால், சிறிது காலமே இருந்து மறைந்து விடுகிறது. துயரம், சோகம், பயம், கஷ்ரம் போன்றவற்றை, அவை விலகக் கூடியவை என்கிற உணர்வில் நீங்கள் தாராளமாக எதிர் நோக்கலாம். தவிர்க்க முடியாத ஒன்று எதிர்ப்படும்போது, அதை அப்படியே ஏற்கச் சித்தமாக இருங்கள். ஏனெனில், அது குறித்து நீங்கள் செய்வதற்கு எதுவும் இல்லை. எனவே, அதையே பிடித்துத் தொங்கிக் கொண்டிருக்காதீர்கள். மூழ்கும் கப்பலின் மேற்தளத்தைக் கழுவிச் சுத்தப் படுத்திக் கொண்டிருப்பது வீண்வேலை. அது மூழ்கத் தான் போகிறது. நீங்கள் செய்ய வேண்டியது எல்லாம், மூழ்கும் கப்பலை விட்டு, விட்டு அடுத்த பயணக் கப்பலைத் தேடுவது தான்.

எதிர் காலத்தின் கதவுகள் உங்களுக்காகத் திறந்து இருக்கின்றன. ஏற்கனவே மூடிவிட்ட கடந்த காலக் கதவைப் பார்த்தபடியே தயங்கிக் கொண்டு இருக்காதீர்கள். ஒரு கதவு மூடும் போது, இன்னொரு கதவு திறக்கிறது என்பது வாழ்க்கையின் நியதி. மூடிவிட்ட கதவைச் சோகத்தோடு பார்த்தபடி காலத்தைக் கழிக்கிறோமே தவிர,



# மாணவர் பக்கம்

திறந்த கதவை நாடிச் செல்லு கின்ற நல்ல காரியத்தை நாம் செய்வதில்லை.

இருண்ட தினம் கழிந்து போகும் என உணர்வது, மிகப் பெரிய மனப்பலத்தைக் கொடுக் கும். நீங்கள் தூக்க முடியாத சுமையை, தூக்க வேண்டிய அவசியமில்லை என அறிவதில் மிகுந்த பலம் இருக்கிறது. கடந்த காலப் பாரங்களைச் சுமப் பதோடு, ஒவவொரு நாட்பாரத் தையும் நீங்களே முதுகில் ஏற்றுக்கொள்ளும் போது தடுமாற ஆரம்பிக்கிறீர்கள்.

ஒவ்வொரு நாட் பாரமும் அன்றைக்குப் போதுமானதாக இருக்கட்டும். ஒரு நாட் பாரத்தை மட்டும் சுமப்பதற்கு உங்க ளிடம் போதுமான பலம் இருக் கிறது.

இன்றைய நேரம் கழிந்து விட்ட பிறகு. நாளை எப்படி இருக்கும்? ஒன்றைப்பற்றி நீங்கள் நிச்சயமாக இருக்கலாம். நாளை வித்தியாசமான தாக இருக்கும். ஏனெனில், வாழ்க்கை மாறிக் கொண்டே இருப்பது. நாளைக்கு நடக்க இருக்கும் மாற்றங்களை உங்களால் கட்டுப் படுத்த முடியாது. ஆனால், உங்கள் வாழ்க்கையில் நடக்க இருக்கும் மாற்றங்களின் மீது உங்கள் செல்வாக்கை நீங்கள் பயன் படுத்த முடியும். ஒவ்வொரு சம்பவத்தின் மீதும் நீங்கள் கொண்டிருக்கும் மனோபாவம், அது குறித்து நீங்கள் மேற் கொள்ளும் நடவடிக்கை ஆகியவை முற்றிலும் உங்களைப் பொறுத்த விடயம் தான்.

மனோபாவம், நடவடிக்கை ஆகிய விடயங்களில் என்ன செய்ய வேண்டும் என்பதை நீங்கள் தீர்வுசெய்ய முடியும். இருண்ட தினத்தின் கதவு மூடப் படும் போது, புதிதாகத்திறந்த கதவை நீங்கள் தேடிக் கண்டு பிடிக்கலாம். அதன் வழியாக நடந்து செல்லலாம்...... துணிச் லாக நம்பிக்கையுடன்...... ஒளி பொருந்திய மறு நாளை நோக்கி!

**எம். ஆர். கோப்மேயர்**

# 'அந்தக்' காலத்து அப்புவும் 'நவீன' யுகப் பேரனும்

எங்களில் எத்தனையோ பேருக்குப் பல்வேறு விதமான பொருட்களையும், பெயர்களையும் தெரியும். ஆனால், அவற்றைப் பற்றிச் சரியான முழுமையான தகவல்கள் தெரியாது. இத்தொடரில் வரும், அப்பு, அந்தக் காலத்தவர். (கல் தோன்றி மண்தோன்றாக் காப்மென்று நினையாதீர்கள். விமானத்தைப் பார்த்து, 'ஆ' வென்ல காலம்) அவரது பேரன் இளங்கோவோ துடிப்பான இளைஞன்ற அறிவியலை ஆர்வத்தோடு கற்றவன். அப்புவின் அப்பாவித்தனமான கேள்விகளுக்கு, தெளிவாகவும், சுருக்கமாகவும் பதில் அளிக்கிறான் பேரன் முதலில் நவீனயுகத்துக் கொம்ப்யூற்றர் பற்றித்தான் அப்புவுக்குச் சந்தேகம்.

## அரும்புகள்

அப்பு: எட தம்பி என்னடா களைச்சுவிழுந்து வாறாய்.

பேரன்:- ஓமப்பு; இப்ப கோண்டாவில் அறிவியல் மையத்துக்குப் போட்டுவாரன்.

அப்பு:- ஏண்டாப்பா இவ்வளவு தூரம் சைக்கிளோடி அங்கை போனனி?

பேரன்:- வேறை என்னத்துக்கு? கொம்ப்யூற்றர் பற்றி ஒரு கட்டுரை எழுதோணும். அதுக்குத் தேவையான புத்தகம் படிச்சுப் போட்டு வாறன்.

அப்பு:- சரிதம்பி பொறு பொறு; என்ன பேர் தம்பி கொம்ப்யூற்றரோ? அவர் டொக்ரரின்ரை மோனும் கொம்ப்யூற்றர் படிக்கிறானாம். அது என்ன தம்பி?

பேரன்:- அப்பு! நீங்கள் ஒரு கணக்கை எவ்வளவு நேரத்தில் செய்து முடிப்பியள்? எப்படியும் ஓர் அரை நிமிடம் ஒரு நிமிடம் ஆகும்; என்ன?

அப்பு:- ஓமோம் தம்பி! முந்தி, கணக்குச் செய்யக் கனநேரமெடுத்துப் போட்டன் எண்டு ஆறுமுகம் வாத்தியார் அடிச்சவர்.

பேரன்:- அதுதான் அப்பு, இந்தக் கொம்ப்யூற்றர் நினைவகத்திலை பதிவு செய்து வைத்திருந்தால், சிக்கலான கேள்விகளுக்கும் டக் டக்கெண்டு பதில் சொல்லும். அதோட.........

அப்பு:- பொறு தம்பி; அந்த மூலைக்கடையிலை மனேச்சர் ஏதோ கறுப்புப் பெட்டி ஒண்டை வைச்சிருந்து டிக் டிக் கெண்டு தட்ட அதுக்கை பச்சை, பச்சையா ஏதோ காட்டுது.

பேரன்:- அது அப்பு கல்குலேற்றர். அதாவது, கணிக்கும் பொறி. அது சரி இந்தக் கொம்ப்யூற்றரின் வேகம் என்ன தெரியுமோ? நாளோ விநாடி; அதாவது நூறுகோடியில் ஒரு பகுதி விநாடி.

அப்பு:- ஐயோ! கேட்கவே தலையைச் சுத்துது.

பேரன்;- முதன் முதல் மின்சாரக் கொம்ப்யூற்றர் பெயர் எனியாக். 1945 ஆம் ஆண்டு உருவானது. 30 அடி அகலம் 50 அடி நீளம்.

அப்பு:- அதுக்கை ஒரு வகுப்பே நடத்தலாம் போலை. இது ஆர் செய்யிறது?

பேரன்:- இப்ப ஐ. பி. எம் (I. B. M) எண்ட நிறுவனம்தான் கொம்ப்யூற்றர் உருவாக்குவதில் பிரபலம்.

அப்பு:- அப்ப தம்பி கொம்ப்யூற்றரோடை தமிழிலை கதைக்கலாதோ?

பேரன்:- இல்லையப்பு; அதுக்கு எந்திர மொழி எண்டும், இணைப்பு மொழி எண்டும், பைனரி மொழியெண்டும் கிடக்கு. அதிலை எல்லா எழுத்தும் 1ம் 0ம் தான். உதாரணமாக-: சாளரம் (SALARAM) என்றால்,

| | | | |
|---|---|---|---|
| (110 010) | (010 001) | (100 011) | (010 001) |
| S | A | L | A |
| (101 001) | (010 001) | (100 100) | |
| R | A | M | |

அப்பு:- அப்ப என்ரை ராஜராஜவீரராகவ பூபதி எண்ட பேரை கொம்ப்யூற்றரில 1 மைல் நீளத்துக்கு எழுதோணும்.

பேரன்:- இல்லையப்பு! 'பிட்' என்று ஓர் அங்குலத்துக்கை எத்தனையோ ஆயிரம் சொல்லை வைக்கலாம். இந்த பைனரி எண்களைத் தமிழிலே இருமை எண்கள் என்று கூறுகிறது.

அப்பு:- 0உம் 1உம் இருந்தால் இருமை தானே. இவ்வளவும் சொல்லுறாய்; இந்தக் கொம்ப்யூற்றரை ஆர் முதலிலை கண்டு பிடிச்சது?

பேரன்:- பாஸ்கல் எண்ட 19 வயதுப் பெடியன்தான். அது கூட்டக் கழிக்க மட்டும் பயன்பட்டது. கொம்ப்யூற்றர் புறோக்கிறாம் எழுதினவர் லேடி லவ்லேஸ் எண்ட பெண்.

அப்பு:- அப்ப எனியாக்கை.

பேரன்:- அது, ஜோன் மர்கீலேயும், அவரது மாணவர் பிரஸ்பர் எக்கர்ட்டும்.

அப்பு:- அப்ப கொம்ப்யூற்றரும் மனிதனைப் போலத்தானே

பேரன்:- ஓமப்பு! ஆனா இதுக்குச் சுயமாக யோசிக்கத் தெரியாது. பதிவு செய்ததைத்தான் சொல்லும். தானா யோசிக்க வைக்கவும், ஆராய்ச்சி செய்யினம்.

அப்பு:- நீ உண்மையிலேயே கெட்டிக்காரன் தானடா! எனக்குத் தெரியாததை எவ்வளவு வடிவாய் விளங்கப்படுத்திப் போட்டாய். அடுத்தமுறை ஏதேனும் சந்தேகம் வந்தால் கேக்கிறன்.

பு. ஈழநாதன்
ஆண்டு ஏ
உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி.

---

● கலிபோர்னியாவில் உள்ள ஸ்யர்ஸ் கட்டடமே உலகில் மிக உயர்ந்த கட்டடமாகக் கருதப்படுகின்றது. இது, 110 மாடிகளையும், 1454 அடி உயரமும் கொண்டது.

---

# எலக்ட்ரோனிக் புத்தகம்

அமெரிக்காவில் தயாரிக்கப்படும் இந்த எலக்ரோனிக் புத்தகம் சில வருடங்களாக விற்பனையிலுள்ளது. எனினும், தற்போதுதான் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. எலக்ரோனிக் புத்தகங்கள் இரண்டு முறையில் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஒன்று கணனியில் போட்டு, படித்துப் பார்க்கக்கூடியது. மற்றையது, கல்குலேற்றர் அளவில் உள்ளது. இது ஒரே புத்தகமாக இருக்கிறது. தற்போது கதைப் புத்தகங்களைக் கூட, எலக்ரோனிக் புத்தக வடிவில் வெளியிடுகின்றனர்.

1990 ஆம் ஆண்டு ஒருலட்சம் எலக்ரோனிக் புத்தகங்கள் விற்பனையாகியிருந்தன. ஆனால், 1993 ஆம் ஆண்டில் இதன் விற்பனை நான்கு லட்சமாக உயர்ந்தது. கணனியில் பயன்படுத்தும் பாடப் புத்தகங்களில் படங்கள், வரைபடங்கள், குறியீடுகள் ஆகியவையும் இடம்பெறுகின்றன. கணனியில் பயன்படுத்தப்படும் 'பிளாப்பி டிஸ்'க்களில் ஒரே நேரத்தில் பல புத்தகங்களைப் பதிவு செய்யும் வசதி உள்ளதால், எலக்ரோனிக் புத்தகம் வாங்குபவர்களிற்கு மிகவும் பயனுள்ளதாகக் காணப்படுகின்றது. இப்புத்தகங்களைச் சிறுவர்களால் நன்கு படிக்க முடிகிறது. ஆனால், இளைஞர்களிற்கு கணனித்திரையின் ஒளி காரணமாக, சற்றுச் சிரமமானதாகக் காணப்படுகிறது. அமெரிக்காவில் பாடசாலை மாணவர்கள் பெருமளவில் எலக்ரோனிக் புத்தகங்களைப் பயன்படுத்துகின்றனர். இதன் விலை 200 டொலர் முதல் 2000 அமெரிக்க டொலர் மட்டுமே.

தொகுப்பு- ரகுராம்
யாழ்/வல்வை சிதம்பராக் கல்லூரி

---

உழைப்பாலும் விடாமுயற்சியினாலும் உயர்ந்த ஜப்பான் என்பது, 4223 தீவுகளின் கூட்டம், இவற்றில் ஹோன்ஷு, ஷிகோடை, க்யூஷி, ஹொகைடோ ஆகிய 4 தீவுகள்தான் மிகப் பெரியவை. ஹோன்ஷு தீவில் தான் ஜப்பான் தலை நகரான ரோக்கியோ அமைந்துள்ளது. இவற்றைவிட, 600 தீவுகளே மக்கள் வாழ்வதற்கு ஏற்ற இடங்களாக உள்ளன.

# இளையோர் அரங்கம்

'இளையோர் அரங்கம்' எனும் பகுதி 'சாளரம்' இதழில் விரைவில் இடம்பெற இருக்கிறது. எழுத்துத் துறையில் ஆர்வமுள்ள இளையோர் இதில் பங்கு கொள்ள வாய்ப்பளிக்கப்படவிருக்கிறது. குறிப்பாக, மாணவர்கள் உட்பட 15 வயதிற்கும் 25 வயதிற்கும் உட்பட்ட இளைஞர்கள், யுவதிகள் தங்கள் எழுத்தாற்றலை வளர்த்துக்கொள்வதற்காகவே இப்பகுதி இடம்பெறவிருக்கிறது. கவிதை, கட்டுரை, சிறுகதை, குறுங்கதை, ஓவியம் போன்ற ஆக்கங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள். ஆக்கங்கள் யாவும் சமகாலத்தை மையமாகக் கொண்டு அமைதல் அவசியமாகும்.

குறிப்பாக, விஞ்ஞான அறிவியற் கட்டுரைகள் எழுதுபவர்கள், எமது நாட்டின் வளங்களோடு ஒப்பிடக்கூடியவாறு கட்டுரைகளை எழுதினால், அவற்றுக்கு நாம் முன்னுரிமை கொடுத்துப் பிரசுரிப்போம்.

அறிமுகமாகவிருக்கும் இளைய படைப்பாளர்களே! ஆக்கங்கள் யாவும் உங்கள் சொந்த ஆக்கங்களாகவும், அவை முன்னெப்போதும் எதிலும் வெளிவராதவை ஆகவும் இருத்தல் வேண்டும். தரமான படைப்புக்கள் நிச்சயமாகப பிரசுரிக்கப்படும். மேலதிக விபரங்களை, உங்கள் ஆக்கங்கள் எமது அலுவலகத்திற்குக் கிடைத்தபின்பு அறிந்து கொள்ளலாம்.

# சந்தோசம் காணுங்கள்!

— த. ஜெயசீலன் —

ஆனிக் குளிர்கலந்து ஆடிவரும் மென்காற்று
மேனி தொடும்;
காலை விளக்காய்......முழுநிலவின்
வட்டமுகம் வானை வருடிப்பால் வார்த்துவிடும்.
மொட்டு வெடித்துதிரும்;
புதுமலர்கள் மூச்சுவிடும்;
எட்டும் இடமெல்லாம் இளம்பச்சை வரவேற்றுக்
கண்பனிக்க வைக்கும்;
கசிந்தயலில் வாசமெழும்.
வண்ண வண்ணப் பூக்கள் வழிநெடுகக் கோலமிட
சின்னஞ் சிறுதேனீ சிறகுலர்த்தித் தேன்குடிக்கும்.
மின்னற் கதிரெழும்ப; மேகக் கருங்கூந்தற்
கன்னியவள் கன்னஞ் சிவப்பாகும்; காலையெழும்.
எழில்பூத்து எங்கள் நிலமே இனிப்பாகி
மொழிகெட்டு நெஞ்சில் முழுமைவரும்.
அட.........! இதற்குள்
யார் சொன்னான்? இங்கே யௌவனங்கள் இல்லையென்று?
''பார்வை இலானாக்கும், பரதேசி!''
— எம் ஊரின் —
கட்டடங்கள் இல்லாக் கழனியது........
கவியியற்கை
அற்புதத்தின் உச்சம் அணிவகுக்கும் இடமெல்லோ?
கும்பிட்டு நட்டால், குலைபோடத் தூண்டிவிடும்
செம்பாட்டு மண்ணெம் செங்கம் பளமெல்லோ?
செம்மணி வயல்வெளியெம் சீதனமாம்!
சிற்றாறாய்.......
பொன் சுமக்கும் வெள்ளம்...... புற்களது கால்கழுவி
துள்ளிடுமே! இதுமுதுசச் சொத்ததுவாம்!
நீர்வேலித் தோட்டநிலம்,
சுற்றித் தொடரும் வயல்வெளிகள்,
'ஆட்டக் கரக' அதிர்வாய் அலையொலிக்கும்



பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

உப்புக் கடற்கரைகள் ஊர்எல்லைப் புற்றரைகள்
அப்பி அழகொளிரும், ஆலயங்கள்
இங்கெல்லாம்.........
நின்றால்........... நினைவிழந்து, நெஞ்சகத்துப் பொய் களைந்து
கெந்திப் பறந்து,
கிடைக்காத மோட்சமுண்டு,
செந்தேனில் தோய்ந்து சிலிர்ப்பேனாம்.........
''இளசுகளே''...........
வந்தெங்கள் மண்ணின் வசந்தம் குடித்தொரு நாள்
சந்தோசம் உண்டு சிரியுங்கள்.
அது போதும்!

# சாளரமே நீ வாழி!

சாளரமே!
ஈரிரண்டு வயதினை நீ தாண்டி
ஐந்தாம் அகவைதனில் பாதம் பதித்திடும்
அன்புச் சாளரமே உனக்கு,
எனது வாழ்த்துக்கள்! அதை
நான் அவசரம் சொல்லவேண்டும்; ஏனெனில்
நான்காண்டு காலமாக
பற்பல உள்ளங்கள் உன்னால்
கவரப் பட்டு விட்டன.
பற்பல சோதனைகளையும் வேதனைகளையும்
தாய் மண்ணின் துயரங்களையும்
தடைகளையும் தாண்டி;— இன்று
தமிழ் மண்ணில் விருட்சமாகப்
பயன் பல தரும் —
கற்பகத் தருவாக
சாளரமே! நீ மலர்ந்து நிற்கின்றாய்.
சாளரமே தாமதியாது மாதந்தோறும்
நீ மலர்ந்து, தினம் தினம்
மங்காப் புகழுடன் எம் மண்மீது
நீ பிறந்து
தமிழ்த் தேசமெங்கும் மணம் பரப்ப
வேண்டுகின்றேன் ...வாழ்க!
சாளரமேநீ வாழி!

**வே. சசிகலா,**
கைதடி வடக்கு, கைதடி.

சு.சுதா,
வண்ணாங்கேணி வடக்கு,
பளை.

விண்வெளியை முதன்முதலில் சுற்றி வந்த விண்கலம் எது? இது யாரால் அனுப்பப்பட்டது?

விண்வெளியை முதன்முதலிற் சுற்றிவந்த செயற்கைக்கோள் ரஷ்யாவின் ''ஸ்புற்னிக்'' (Sputnik) இது, 1957 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 4 இல் பூமியில் இருந்து ஏவப்பட்டது. இதன் நிறை 83.6 கிலோ கிறாம். 2285.9 கி. மீ. உயரத்தில் மணிக்கு 28565 கி.மீ. வேகத்தில் இயங்கியது.

சாந்தி கந்தையா,
அளவெட்டி தெற்கு,
அளவெட்டி.

குறிப்பிட்ட காலப் பகுதியில், கண்ணாடி அணிபவர்களின் தொகை அதிகரித்து வருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளதே; இதற்கான காரணம் யாது?

ஸ்ரீலங்காப் பேரினவாத அரசின் கடந்த காலப் பொருளாதாரத்தடை, இனஒடுக்கு முறைகளின் விளைவுகளில் இதுவும் ஒன்று. போதிய போஷாக்கான உணவுகள் கிடைக்காமை, குறைந்த ஒளியிற்படிப்பது, எழுதுவது, விமானத்தில் இருந்து வீசப்படும் 'நேபாம்' போன்ற நச்சு வாயுக்




— ஆனந்தி

குண்டுகள், ஷெல்களின் இரசாயனத் தாக்கம், மனப்பதற்றம் ஆகிய காரணங்களினால் எங்களில் பலருக்குக் கண்களிற் பாதிப்பு ஏற்படுகின்றது.

மௌ. மதுவர்மன்,
மு/வித்தியானந்தாக் கல்லூரி,
முள்ளியவளை.

'ஹிரோஷிமா' அணுக்குண்டு வெடிப்புக்கு யார் காரணம்?

மொழித் தடுமாற்றம் தான்காரணம். 2 ஆம் உலகப்போர் நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேளையில், அமெரிக்க அரசு ஜப்பானைச் சரணடையுமாறு கோரி, கடிதம்அனுப்பியிருந்தது. அதற்கு ஜப்பானிய அரசு அனுப்பிய பதிலில், ''மொகுசட்ச'' என்ற ஜப்பானியச் சொல்லைப் பயன்படுத்தியிருந்தது. இதற்கு, "உங்கள் இறுதி எச்சரிக்கையைப் பரிசீலனை செய்கின்றோம்'' என்பதுபொருள். ஆனால், அமெரிக்காவுக்குக்கிடைத்த இதன் மொழிபெயர்ப்பில், உங்கள் இறுதி எச்சரிக்கையை நிராகரிக்கின்றோம்' எனத் தவறாகக் கிடைக்கவே' ஆத்திரம் அடைந்த அமெரிக்க அரசுஹிறோஷிமாவின்மீதுஅணுக்குண்டு வீசுவதற்கான காரணமாக அமைந்தது. ஹிறோஷிமாவின்மீது குண்டுகளை வீசியவர் கடந்த ஜூன் மாதந்தானே இறந்தார்.

கீ. நிருத்திகா,
பருத்தித்துறை மெதடிஸ்ற் பெண்கள் கல்லூரி,
பருத்தித்துறை.

கூழ்முட்டை நீரில் மிதப்பதற்கும், நல்லமுட்டைநீரில் அமிழ்வதற்கும் காரணம் என்ன?

பழுதடைந்த கூழ் முட்டைகளின் வெளிஓட்டின் மேலுள்ள மென்மையான மெழுகு போன்ற பொருள் நுண்ணங்கிகளால் சிதைவடைய, அதனுள் வளிஉட்செல்லும். இதனால், முட்டையினுள் உள்ள வெற்றிடம், வளியினால் நிரப்பப்படும். கூழ் முட்டையை நீரிற் போடும்போது, மிதவை விதியின்படி, அதன்நிறைக்குச் சமனான நீர் இடம்பெயர்க்கப்படுவதால் முட்டையினதும், இடம்பெயர்க்கப்படும்நீரினதும்திணிவும் சமனாகும்போது, மேலுதைப்பின் காரணமாக முட்டைமிதக்கின்றது. ஆனால், நல்ல முட்டையின்

திணிவு, அதனால் இடம்பெயர்க்கப்படும் நீரினால் ஏற்படும் மேலுதைப்பிலும்அதிகமானதால், நீரில் அமிழ்கிறது. நிருத்திகா... இந்தத் தத்துவத்திற்கெல்லாம் வித்திட்டவர் நமது 'யுறேக்கா' விஞ்ஞானி ஆக்கிமிடிஸ்தான்.

சு. அமுதா,
தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை ம/வி
வல்வெட்டித்துறை.
சீ.மனோரஞ்சன்,
ஆழியவளை சீ.சீ.த.க. பாடசாலை,
தாளையடி.
தீ.ஜனகன்,
இமையாணன், உடுப்பிட்டி.

வானம் நீல நிறமாகக் காட்சியளிப்பதன் காரணம் என்ன?

பூமியைச் சுற்றியுள்ள வளிமண்டலத்தில் நைதரசன், ஒட்சிசன், காபநீரொட்சைட்டு, தூசிகள், நீராவி மற்றும் பல சடத்துவ வாயுக்கள் உண்டு. இவ்வளிக் கலவையில் சூரிய ஒளிக்கதிர்கள் பட்டுத்தெறிப்படையும்பொழுது, ஊதா, கருநீலம், நீலம் தவிர்ந்த ஏனைய நிறங்கள் உறிஞ்சப்பட்டு விடும். இவையே பூமியை வந்தடைகின்றது. இம்மூன்று நிறங்களும் சேரும்போது, நீலநிறம் கூடுதலாக உண்டாகும். நீலம் குறைந்த அலை நீளம் உடையதால், இலகுவில் சிதறடிக்கப்படுவதால் வானம் நீலநிறமாகக் காட்சி அளிக்கின்றது.

தீ.றஜீவன்,
யாழ்ப்பாணம்

சோதனைக் குழாயில் வளரும் குழந்தைக்கு, தாயின் கருப்பையில் வளரும் குழந்தையைப்போல் தொப்புள் கொடி இருக்குமா?

றஜீவன்... சோதனைக் குழாயில் செயற்கை முறையில் ஓர் ஆணின் விந்தையும், முட்டையையும் (சூல்) கருக்கூட்டல் அடையச் செய்து, அவ்வாறு உண்டான நுகத்தை ஒரு பெண்ணின் கருப்பையில் உட்பதிக்கப்பட்ட பின்பே, குழந்தையின் வளர்ச்சி தொடர்கின்றது. இதற்கு, இயல்பாகவே உண்டாகும் தொப்புள் நாண், அமினியன் போன்ற அனைத்தும் தோற்றுவிக்கப்படும். 285 நாட்களும் சோதனைக் குழாயிலேயே கரு வளர்ச்சியடைவதில்லை.

# விளையாட்டு

## மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டிகள்

யாழ். மாவட்டப் பாடசாலைகள் விளையாட்டு அபிவிருத்திக்குழு நடத்திய மாவட்டநிலை மெய்வல்லுநர்ப் போட்டிகள் ஜூன் மாதம் 12, 13, 14ஆம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன. அறுநூறுக்கு மேற்பட்ட வீரர்கள் வீராங்கனைகள், பங்குபற்றினர்.

தமிழீழப் போராட்டத்தில் தங்களை ஆகுதியாக்கிய மாவீரர்கள் நினைவாக, வெற்றிக் கேடயங்கள் வழங்கப்படுகின்றன. இவ்வெற்றிக் கேடயங்கள்களைத் தமிழீழ விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பும், தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையும் வருடாவருடம் வழங்கி வருகின்றன. மெய்வல்லுநர்த் துறையில் யாழ் மாவட்ட மாணவர்கள் பல புதிய சாதனைகளை ஏற்படுத்தி வருகின்றனர். இப்போட்டிக்குப் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடக்கு, கிழக்கு, மாகாணக் கல்வி அமைச்சின் பிரதிச் செயலர், தமிழீழச் சிறார்களின் விளையாட்டுத்துறை வளர்ச்சியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி உரையாற்றினார்.

☐ உலகக் காற்பந்துச் சுற்றுப்போட்டி என்றால், ஒரே பரபரப்பு தான். சென்ற வருடம் அமெரிக்காவில் நடந்த போட்டிகள் ஒரே அமர்க்களம். ஆனால், பெண்களுக்கான உலகக் காற்பந்துச் சுற்றுப்போட்டி இப்போது நடந்து முடிந்துள்ளது. நோர்வே நாட்டு அணி, ஜேர்மன் அணியைத் தோற்கடித்து முதலாவது இடத்தைப் பெற்றுள்ளது.

## முதன்மை வீரர்கள், வீராங்கனைகள்

| | | |
|---|---|---|
| 15 வயதுப் பிரிவு ஆண் (லெப். கேணல் குணா நினைவு) | அ. துஷ்யந்தன் | யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி. |
| 17 வயதுப் பிரிவு ஆண் (லெப். கேணல் சூட் நினைவு) | பா. பாலமுரளி | யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி. |
| 19 வயதுப் பிரிவு ஆண் (லெப். கேணல் ராஜன் நினைவு) | ச. விமலன் | யா/பரி. யோவான் கல்லூரி, |
| 15 வயதுப் பிரிவு பெண் (கப்டன். அமுதினி நினைவு) | க. நிஜா | யா/திருக்குடும்பக் கன்னியர் மடம் மகா வித்தியாலயம். |
| 17 வயதுப் பிரிவு பெண் (மேஜர். யாழிசை நினைவு) | வி. விஜயப்பிரபா | யா/வேம்படி மகளிர் கல்லூரி. |
| | செ. குகாயினி | யா/இந்து மகளிர் கல்லூரி, |
| 19 வயதுப் பிரிவு பெண் (மேஜர். சுகன்யா நினைவு) | யே ஜமினி | யா/அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயம், |
| | இ. கலாமதி | யா/கொடிகாமம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை |


அதிக புள்ளிகளைப் பெற்ற கல்விக் கோட்டங்கள் (லெப்.கேணல் பொன்னம்மான் நினைவு)

முதலாம் இடம் — யாழ்ப்பாணம்
இரண்டாம் இடம் — நல்லூர்
மூன்றாம் இடம் — பருத்தித்துறை

— அ. நிருஷன்

☐ ஆசிய விளையாட்டு 1951ஆம் ஆண்டு தொடக்கம், நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறுகிறது. இது, 'ஏசியாட்' என அழைக்கப்படுகிறது. சென்ற வருடம் ஜப்பானில் 'ஹிரோஷிமா' நகரில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. 1998 ஆம் ஆண்டு தாய்லாந்து நாட்டில் 'பாஸ்காஸ்' நகரில் நடைபெற இருக்கிறது.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் பிரதேச...




### ஒழுங்காகக் கிடைக்குமா?

☐ நான், 'சாளரம்' சஞ்சிகையின் உற்ற நண்பன் என்ற வகையில் இதனை எழுதுகிறேன். சஞ்சிகையின் வளர்ச்சி நிறைவானதாக இருந்தாலும், எமது கல்லூரிக்கு ஒழுங்காகக் கிடைக்காமை, ஒருகுறைஎனக் கருதுகிறேன். எனவே, எமது கல்லூரிக்கு ஒழுங்காக 'சாளரம்' கிடைக்க வழிசெய்து, எமது அறிவுப்பசிக்கு உணவு இடவும்.

வே. தவச்செல்வம், பளை மத்திய கல்லூரி.

### கடுகு சிறுத்தாலும்...

☐ சின்னஞ் சிறு இதழிலே பென்னம் பெரு விடயங்களை, பற்பல செய்திகளைத்தாங்கி வந்து, தமிழீழத்திலே வாழும் என்போன்ற வாசகர்களுக்கு, தாமதியாமல் உன்பணி தொடரட்டும். வையகம் உன்னை வாழ்த்தட்டும்.

ச. கலைச்செல்வன், சங்கானை மேற்கு, பண்டத்தரிப்பு.

### ஏக்கம் தீருங்கள்!

☐ யா/இமையாணன் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவனாகிய நான், தங்களது இளையோர் திங்கள் இதழான சாளரத்தில் உள்ள அனைத்து விடயங்களாலும் மிகவும் பயனுறுகின்றேன். இப் பயனுள்ள செய்திகளால் மகிழ்ச்சியடையும் எனக்கு, தங்களது இதழ் மாதந்தோறும் ஒழுங்காகக்கிடைக்பதற்கான வாய்ப்புக்கள் குறைவாகவுள்ளன. மாணவனாகிய எனக்குக் கிடைத்த சில இதழ்களிலுள்ளபயன் தரும் பல விடயங்களை அறியமுடியவில்லையே என்ற ஏக்கமும் குடிகொண்டுள்ளது. எனது ஏக்கத்தை நிவர்த்தி செய்யும் வகையில், தாங்கள் சாளரம் இதழை எனக்கு மாதந்தோறும் அனுப்புவீர்களாயின் மிகவும் மகிழ்ச்சியடைவேன்.

கோ. ஜெகதாஸ், பூவத் தோட்டம்,
இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி.

('சாளரம்' இதழ் விநியோகம் தற்போது மேலும் சீரமைக்கப்பட்டுவருகிறது. இதழ் வெளியானதும், தொலைவில் உள்ள பிரதேசப் பாடசாலைகளுக்கும், உடனடியாக விநியோகஞ்செய்ய, எல்லா முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. எனவே சாளரம் வாசகர்கள் இனி கவலைகொள்ளத் தேவை இல்லை.)

| | | | | |
|---|---|---|---|---|
| **Athavan:-** | After a long time, we heard the sound of shelling and fighting near the Fort. | — | **ஆதவன்:-** | நீண்ட காலத்தின் பின்னர், நாங்கள் கோட்டைக்கருகாமையில் எறிகணையினதும் போரினதும் சத்தத்தைக் கேட்டோம். |
| **Bala:-** | It was not at the Fort, but at Mandaithivu. The LTTE have attacked the sentry points and the camp of the Sri Lankan army. | — | பாலா:- | அது, கோட்டையில் அல்ல; ஆனால், மண்டைதீவில் தமிழீழ விடுதலைப்புலிகள் இலங்கைப் படையினரின் காவல் நிலைகளையும், முகாமையும் தாக்கியுள்ளனர். |
| **Athavan:-** | Ah, that's correct. I read about it in our dailies. This type of military operation is different from the Black Tiger operation at Trincomalee on 19th April. | — — | **ஆதவன்:-** | அது சரி. நான் அதைப்பற்றி எங்களது நாளாந்தச் செய்தித்தாள்களில் வாசித்தேன். இவ்வகையான படை நடவடிக்கை, ஏப்ரல் மாதம் 19 ஆம் நாளன்று திருகோணமலையில் இடம்பெற்ற கரும்புலி நடவடிக்கைகளிலிருந்து வேறுபட்டது. |
| **Bala:-** | It's true that it is a different type of operation. But in both operations a lot of military personnel have been killed. | | பாலா:- | இது ஒரு வித்தியாசமான நடவடிக்கை என்பது உண்மை. ஆனால், இரண்டு நடவடிக்கைகளிலும் அநேக படைவீரர்கள் கொல்லப்பட்டுள்ளனர். |

| | | | | |
|---|---|---|---|---|
| **Athavan:-** | It takes a lot of planning, commitment and courage to do this. | — | ஆதவன்:- | இதைச் செய்வதற்கு, அதிக திட்டமிடல், அர்ப்பணிப்பு மற்றும் துணிவு வேண்டியுள்ளது. |
| **Bala:-** | Yes, imagine the commitment of the Black Tigers. They carry out the military operations, knowing that their chances of survival are minimal. | — | பாலா:- | ஆம். கரும்புலிகளின் அர்ப்பணிப்பை எண்ணிப்பாருங்கள். தாங்கள் உயிர் பிழைக்கும் வாய்ப்புக்கள் மிகவும் குறைந்ததென்று தெரிந்து கொண்டே, படை நடவடிக்கைகளை அவர்கள் செய்து முடிக்கிறார்கள். |
| **Athavan:-** | It's indeed a great sacrifice for our people's freedom. | — | ஆதவன்:- | உண்மையில், அது எமது மக்களின் விடுதலைக்கான ஒரு பெருந் தியாகமாகும். |
| **Bala:-** | Certainly it is. It's appropriate that July 5th is dedicated to their memory. | — | பாலா:- | நிச்சயமாக, அது முற்றிலும் உண்மை. அவர்களை நினைவுகூருவதற்கு, ஜூலை மாதம் 05 ஆம் நாளை அர்ப்பணித்தமை பொருத்தமானதாகும். |
| **Athavan:-** | Why do they celebrate this day on July 5th? | — | ஆதவன்:- | இந்நாளை ஏன் ஜூலை மாதம் 05ஆம் நாள் கொண்டாடுகிறார்கள்? |
| **Bala:-** | It's the day of the first Black Tiger operation in 1987. Captain Miller is the first Black Tiger. Can you remember, Miller drove a truck load of explosives into the army camp at Nelliady? | — | பாலா:- | அந்நாளிலேதான், முதலாவது கரும்புலி நடவடிக்கை 1987ஆம் ஆண்டில் இடம்பெற்றது. கப்டன் மில்லரே முதலாவது கரும்புலியாவார். நெல்லியடியிலுள்ள ஒரு படைமுகாமிற்குள் வெடிமருந்து நிரப்பிய வாகனத்தை மில்லர் ஓட்டிச் சென்றமை நினைவில் இருக்கிறதா? |

(38 ம் பக்கம் பார்க்க)

# சந்திரிகாவும் மூன்று அமைச்சர்களும்

ஜி. எல். பீரிஸ்,
அநுரத்த றத்வத்த,
லக்ஷ்மன் கதிர்காமர்

என, சந்திரிகாவிற்கு மூன்று அமைச்சர்கள். இவர்கள் தான், சந்திரிகாவின் முக்கிய அமைச்சர்கள்; பிரபல்யம் வாய்ந்தவர்கள்.

ஜி. எல். பீரிஸ் – கரையோரச் சிங்களவர். ஐ. தே. க.வைச் சார்ந்தவர். ஐ. தே, க. வின் ஆட்சிக் காலத்தில் ஈட்டக்கூடிய அதிகபட்சநலன்களை ஈட்டியவர். ஐ. தே க. ஆட்சி கவிழப்போகும் கடைசிக் கட்டத்தில், சு. க. விற்குக்கட்சி மாறியவர்.

அநுரத்த றத்வத்த – கண்டிச் சிங்களவர். றதுல குடும்பத்தவர். சிறிமாவோ பண்டாரநாயக்காவின் இரத்த உரித்தாளி. கட்சிக்காக உழைத்திருக்காதவர். கட்சியில் ஒப்பீட்டளவில் கனிஷ்டர். இரத்த உரித்தைத் தகைமையாக்கிக்கொண்டு, கட்சிக்குள் உயர் நிலை அடைந்தவர்.

லக்ஷ்மன் கதிர்காமர்– பெயரளவில் தமிழர். தமிழ் மக்கள் ஒருபோதும் அறிந்திருக்காத ஓர் 'அரசியல்வாதி'. சந்திரிகாவிற்கு ஒரு தமிழ் அரசியல்வாதி அளித்த ஆலோசனைக்கும் பரிந்துரைகும் ஏற்ப, சந்திரிகாவால் அமைச்சராய் நியமிக்கப்பட்ட ஒருவர். (இத்தகவலை, லக்ஷ்மன் கதிர்காமர் தன்னைச் சந்தித்த யாழ்ப்பாணப் பிரமுகர் ஒருவரிடம் கூறியிருந்தாராம்.)

தனது கணவனுடன் இணைந்து, சு. க.விற்கு எதிராகக் கட்சிகட்டிப் போர்க்கொடி தூக்கிய சந்திரிகா, சு. க. விற்குள் நுழைந்தமை எப்படி விசித்திரம் இல்லையோ, அப்படி ஐ. தே. க. விலிருந்து அப்போதுதான் கட்சி தாவிய ஜி. எல். பீரிஸை சந்திரிகா தனது முக்கிய முன்னணி அமைச்சராக்கிக் கொண்டதும் விசித்திரம் இல்லை. இனம், இனத்தை நாடியது அவ்வளவுதான். ஆனால், இங்கு விசித்திரம் என்னவெனில், ஐ. தே. க. வின் கறைகளில் எல்லாம் பங்கெடுத்த ஜி. எல். பீரிஸை பொஜன ஐக்கிய முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தை வரைய சந்திரிகா நியமித்த பின்பும், அதே ஜி. எல். பீரிஸை சந்திரிகா முக்கிய முன்னணி அமைச்சராக்கிய பின்பும், சந்திரிகாவை ஒரு நீதிமானாகச் சிலர் நம்பினர் என்பதுதான்.

சு. க. வின் சிரேஷ்ட உறுப்பினர்களும், கட்சிக்காகப் பெரிதும் பாடுபட்டவர்களும் பலர் இருக்க,

ஒன்றுக்கு மேற்பட்ட முக்கிய அமைச்சுக்களை, இரத்த உரித்தின் பெயரால் அநுரத்த றத்வத்தவிற்கு சந்திரிகா கொடுத்தார். இந்த நியமனத்தில் ஜனநாயகமரபுமீறல் தெளிவாய் இருந்தது. இத்தகைய மரபுமீறல்களில் அநுரத்த றத்வத்தவிற்கும் சந்திகாவிற்கும் நிறைந்த ஐக்கியம் இருந்தது.

லக்ஷ்மன் கதிர்காமர் அரசியற் களமற்றவர்; மக்கள் தளமற்றவர். ஒருபோதும் இப்படி ஓர் அமைச்சர் பதவியை அவரால் கனவிலும் கூட, பார்த்திருக்கமுடியாது. யானை, மாலை பட்டதால் ராணியான பெண்ணைப் போல, ஒருவரின் பரிந்துரையால் அமைச்சரானவர். பரிந்துரையால் அமைச்சரானவர், இப்போது சந்திரிகாவின் மிக நம்பிக்கைக்குரிய ஒருவராகிவிட்டார். தன்னைப் பரிந்துரைத்தவரின் பெயரைப் பாதுகாக்கவும், சந்திரிகாவிற்குத் தனது விசுவாசத்தை நிரூபிக்கவும், தமிழினத்தைச் சர்வதேச அரங்கில் விலைகூறி விற்பவராய் உள்ளார்.

இந்த மூவரும்தான் சந்திரிகாவின் முதன்மை அமைச்சர்கள் என்றால், அரசு எப்படி இருக்கும்? சந்திரிகா எப்படி இருப்பார்? இதற்கான பதில், சந்திரிகாவிற்கு ஏற்ற மூன்று அமைச்சர்கள் என்பதுதான். அதாவது, சந்திரிகாவும் மூன்று அமைச்சர்களும்.

— சாரணன்

# கடற் போரில் காரிகையர்!

எங்கே எதிரியின் படகுகள்? இங்கே
தானே இருந்தன
நேற்று வரை.........
தங்கைகள் வந்ததைக் கண்டதும்,
தலை தெறிக்க ஓடிவிட்டனவா?
எங்கள் நாட்டைப் பிடிக்கவும், நடுவே
கோட்டை அமைத்துக் குடியழிக்கவும்,
சேட்டைகள் செய்தலையும் அந்தப்
படகுகள் எங்கே .....? எங்கள் தேசத்
தங்கைகள் தேடுகின்றனர்!

1995 மே-ஜூன் மாத ஓவியக் கவிதை இது.

ப. தயாளன்
தாவடி

# பொது அறிவுப் போட்டி-12

1) 'ஹைக்கூ' என்ற கவிதை வடிவம் இந்த நாட்டினுடையது –
i) பிரான்ஸ் ii) ஜப்பான் iii) சீனா

2) 'ஷில்லர்' என்பவர் இந்த நாட்டைச் சேர்ந்த நூலாசிரியர் –
i) ஆபிரிக்கா ii) வியட்நாம் iii) ஜெர்மன்

3) உலகிலேயே அதிகமாக நாளிதழ்கள் வெளிவரும் நாடு இது –
i) ரஷ்யா ii) அமெரிக்கா iii) இந்தியா

4) 'பெஸ்ரூ றெல்லா பாஸ்ரிஸ் (Pesteurlla Pastis) என்ற பக்ரீறியா இந்த நோயை உண்டாக்குகிறது.
i) பிளேக் ii) மலேரியா iii) செப்ரிசீமியா

5) பாறைகளினாலான புவியின் மேற்பரப்பு ஆங்கிலத்தில் இவ்வாறு அழைக்கப்படுகின்றது.
i) Core ii) Silica iii) Crust

6) இலங்கையின் முன்னாள் பிரதமமந்திரியான இவரின் கொலைக்குப் பின்னணியில் சி. ஐ. ஏ இயங்கியதாகக் கருதப்படுகிறது. அவரின் பெயர்?
i) டி. எஸ். சேனாநாயக்கா
ii) எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா
iii) பிறேமதாஸா

7) 'புலிகளின் தாகம் தமிழீழத்தாயகம்' என்ற தாரக மந்திரம் தலைவர் பிரபாகரனால் இந்த ஆண்டு வரையறுக்கப்பட்டது.
i) 1983 ii) 1970 iii) 1972

8) விற்றமின் 'D' குறைபாட்டினால் ஏற்படும் நோய் இது.
i) காய்ச்சல் ii) என்புருக்கி iii) மாலைக்கண்

---

## பொது அறிவுப் போட்டி 11 இற்கான விடைகள்

1) எட்டாவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு தஞ்சாவூரில் நடைபெற்றது.

2) மார்ச் 8ம் திகதி சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்பட்டது.

3) செய்மதி, 'றொக்கெற்' மூலமாக விண்வெளிக்கு அனுப்பப்படுகிறது.

4) ஆகாயகங்கையை 'Galaxy' என்று அழைக்கிறார்கள்.

5) சூரியன் தோன்றி, 4 கோடி ஆண்டுகள் கடந்து விட்டனவாம்.

6) நிலாவில் காணப்படுவதாக விஞ்ஞானிகளால் குறிக்கப்படுகின்ற உலோகம் தங்கம்

7) இலங்கையில் கொழும்பு நகரம்தான், தேயிலையை ஏலம் விடுவதில் முதலிடம் வகிக்கிறது.

8) 'ஒளிரும் பாதை' (Shining Path) என்பது பெருநாட்டு விடுதலை அமைப்பு

சரியான விடைகளை எழுதியவர்களில் பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள்

**முதலாம் பரிசு 250 ரூபா**

ஆனந்தகுரு குமுதினி
முக்கராவத்தை ஊரிக்காடு,
வல்வெட்டித்துறை.

**இரண்டாம் பரிசு 150 ரூபா**

இ. ஆரணி
உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, உடுப்பிட்டி.

**மூன்றாம் பரிசு 100 ரூபா**

கணேசநாதன் சிறீசாகன்
தொட்டிலடி, சங்கானை.

'சாளரம்' வழங்கும் இப்பணப் பரிசில்களை சாளரம் அலுவலகத்தில் சனிக்கிழமைகளில் பகல் 12 மணிக்கு முன்னதாக வந்து பெற்றுக்கொள்ளலாம். நேரில் வரமுடியாதவர்கள் கடிதம் மூலம் தொடர்பு கொள்ளவும்.

## குறிப்பு

கடந்த இதழில் 'ஒளிரும் பாதை' என்பதை 'ஒளிபுகும் பாதை' எனத் தவறுதலாக அச்சிடப்பட்டிருந்தது என்பதைக் குறிப்பிடவிரும்புகிறோம்' தவறைத் திருத்தி வாசிக்கவும்

---

(34ஆம் பக்கத் தொடர்ச்சி)

**Athavan:-** Yes, I remember that it was after 'Operation Liberation' when the Sri Lankan army was occupying Vadamaraachi. —

**ஆதவன்:-** ஆம்; 'ஒப்பறேசன் லிபறேசன்' எனும் நடவடிக்கையின் பின்னர், வடமராட்சியில் இலங்கைப் படையினர் நிலைகொண்டிருந்த பொழுதாகும் என்பது நினைவில் உண்டு.

**Bala:-** Since that time there have been many unbelievable acts of heroism by the Black Tigers. It's amazing that our girls in our society have also carried out these operations. —

**பாலா:-** அந்நாள் தொடக்கம், நம்பமுடியாதளவு கரும்புலிகளின் வீரச் செயல்கள் பல இடம்பெற்றுள்ளன. எங்கள் சமூகத்திலுள்ள யுவதிகளும் கூட, இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள் என்பது வியப்புக்குரியது.

**Athavan:-** Yes, the Black Tigers have certainly made a major contribution to our struggle. We shall never forget it. —

**ஆதவன்:-** ஆம்; எங்கள் போராட்டத்திற்குக் கரும்புலிகள் பாரியளவு பங்கை நிச்சயமாகவே அளித்துள்ளார்கள். அதை நாம் ஒருபோதும் மறவோம்.

சைக்கிள் உதிரிப்பாகங்கள் பல்பொருள் விற்பனை!

★ தரம்

★ நம்பிக்கை

★ நியாயவிலை

ஒருமுறை எமது ஸ்தாபனத்திற்கு விஜயம் செய்து
உண்மையை உணர்ந்து கொள்ளுங்கள்!

ஞாபகம் வைத்திருக்கவேண்டிய பெயர்

# லிங்கம் விற்பனை நிலையம்

78, சந்தோசம் வீதி, யாழ்ப்பாணம்.

# மாயச் சதுரங்கள் போட்டி

*நீங்கள் பயிலும் பாடசாலைக்கு, பெறுமதிமிக்க விளையாட்டு உபகரணங்களைப் பெற்றுக்கொடுக்க அரியவாய்ப்பு!*


ஆகக்கூடிய தொகையில் கூப்பன்களை அனுப்பும் தமிழீழச் செல்வத்திற்கு 1000/- புத்தகப்பரிசுப் பத்திரம்.

**1 ஆவது பரிசு**
துவிச்சக்கர வண்டி

**2 ஆவது பரிசு**
கைக்கடிகாரம்

**3 ஆவது பரிசு**
கல்குலேற்றர்

மற்றும்
ஆறுதற் பரிசுகள்




**பரிசில்களைப் பெற நீங்கள் செய்யவேண்டியது:-**

☐ வட்டங்களில் உள்ள இலக்கங்களைச் சதுரங்களில் நிரப்புங்கள். இடமிருந்து வலமாக, மேலிருந்து கீழாக, மூலைக்கு மூலையாக, எப்படிக் கூட்டினாலும் 42 வரவேண்டும்.

☐ சரியாக நிரப்பிய சதுரங்களை ஒரு தாளில் கீறி, உங்கள் பெயர், முகவரி, பயிலும் வகுப்பு, பாடசாலையின் பெயர் முதலியவற்றோடு,

**துரிதச் சந்தைப்படுத்தற் சேவை**
**இல. 61, கோவில்வீதி, யாழ்ப்பாணம்.**
என, எமக்கு அனுப்புங்கள்.

ஒருவர் எத்தனை கூப்பன்களும் அனுப்பலாம். ஆனால், ஒவ்வொரு கூப்பனோடும், செஸ்ரோ (Chesto) மோல்ரீஸ் (Malties) ஃபுறுட்டீஸ் (Fruitees) உறைகளில் 25ஐச் சேர்த்து அனுப்ப வேண்டும்.

தமிழீழத்தின் பாடசாலைச் செல்வங்களுக்கு
தமிழீழத்தின் தலைசிறந்த ரொபி / இனிப்புத் தயாரிப்பாளர்கள்.

# றோஸ் பிரண்ட்

'மாலதி' பதிப்பகம், வண் - பண்ணை, யாழ்ப்பாணம்.